www.padippakam.com



# புதிய கண்ணோட்டம்

வெளியீடு: 3 01 மார்கழி 1993 விலை: ரூபா ஐந்து

**இளைய உயிர்கள் அழிகின்றன. தமிழ் பேசும் மக்களின் அவல வாழ்க்கை தொடர்கிறது. 2000 கோடி ரூபா செலவில் மரணச்சடங்கு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.**

## யுத்தத்தின் மூலம் தீர்வு காண முடியுமா?

பூநகரி, நாகதேவன்துறைத் தாக்குதல்களில் உயிரிழந்தவர்களின் சடலங்கள் எண்ணி முடிக்கப்படுவதற்கு முன்பே யுத்தத்தில் வெற்றி தோல்வி பற்றி மார்தட்டத் தொடங்கி விட்டார்கள். சடலங்களை எண்ணுவதும், கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை எண்ணுவதும், எமது தரப்பில் இத்தனை பேர் வீர மரணமடைந்து விட்டார்கள் என்று எவ்வளவு காலத்திற்கு பெருமைப்படப் போகிறீர்கள்?

மனித உயிர்களின் விலை மதிப்பற்ற தன்மை பற்றிய கருத்து இங்கு அடிபட்டுப் போகிறது. யுத்தம் தமிழர்களுக்கு ஒரு தீர்வை நோக்கியதாக இருந்தால் அதில் அர்த்தமிருக்கிறது. ஆனால் இங்கு தீர்வே யுத்தம் என்றல்லவா ஆகிவிட்டது. வட கிழக்கில் ஒரு தலைமுறை அழிந்துவிட்டது. இளைஞர்கள் அரிதாகி வருகின்றனர்.

ஆனையிறவுத் தாக்குதலில் 600 க்கு மேற்பட்டவர்கள் பலியிடப்பட்டார்கள். அதனையடுத்து, தற்போதைய தாக்குதலில் ஏறத்தாழ அதேயளவு தொகையினர் புலிகள் தரப்பில் கொல்லப்பட்டுள்ளனர். இதனைப்போன்று மும்மடங்கு தொகையினர் காயமடைந்துள்ளனர். சரி இத்தகைய தாக்குதல்களின் பலாபலன்கள் என்னவாக இருக்கிறது?

அங்கவீனர்களாக, அகதிகளாக, பட்டினியுடன் இடிபாடுகளுக்குள் வாழும் நிலைக்கு மக்கள் நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கிறார்கள். இதற்கு மேல் தாங்க முடியாது என்ற நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால், யுத்தத்திற்கு ஆள் திரட்டும் வேலை தொடர்ந்து நடைபெறுகிறது. இளைஞர்கள் அருகிவரும் நிலையில் சிறுவர்களை, வயோதிபர்களை யுத்தத்திற்குத் திரட்டும் வேலைகள் நடைபெறுகின்றன.

மனிதர்கள் சுதந்திரமாக, சமாதானமாக வாழ்வதற்காகவே போராடுகிறார்கள். ஆனால் இங்கு சாவதற்காகவே போராட்டம் என்று ஆகிவிட்டது.

சக தமிழர் இயக்கங்களின் செயற்பாட்டை நிராகரித்து, இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக கிடைத்த சந்தர்ப்பங்களையெல்லாம் நழுவவிட்டு, தமிழர்களின் நண்பர்களையெல்லாம் பகைவர்களாக்கிவிட்டு, ஆண்டாண்டு காலமாக தமிழர்களுடன் உற்ற சுற்றமாக வாழ்ந்த முஸ்லிம் மக்களை விரட்டியடித்துவிட்டு, தம்மைத்தாமே அழித்துக்கொள்ளும் முடிவற்ற யுத்தத்தில் புலிகள் இறங்கியிருக்கிறார்கள்.

1990 இல் புலிகள் யுத்தத்தை ஆரம்பித்ததன் பின்னர் அரச இராணுவம், தனது நிலையை வடகிழக்கில் பலப்படுத்தியுள்ளது. கிழக்கு மாகாணத்தில் தமிழர்கள் சிறுபான்மையினராகி விட்டனர் வடக்கு கிழககிலிருநது தமிழர்கள் பெருந்தொகையாக வெளியேறிச் செல்லும் நிலையே ஏறபட்டுள்ளது. இவர்கள் நடாத்தும் யுத்தம் இந்த நிலைமையை அதிகரிக்கச் செய்யுமே தவிர குறைப்பதறகான எநதச சாத்தியக்கூறுகளுமே இல்லை.

மறுபுறத்தில் அரசு 5 ம் வகுப்புத் தராதரத்துடனும், பல்வேறு சலுகைகளுடனும் சிங்கள இளைஞாகளைத் திரட்டி சீருடை அணிவித்து வட கிழக்கிற்கு அனுப்பி வைக்கிறார்கள். குடும்ப வறுமை நிலையைப் போக்க இராணுவத்தில் இணையும் அவனது அஸ்தியையும், சடலங்களையுமே திரும்பவும் வீட்டிற்கு அனுப்பி வைக்கிறார்கள்.

நாடு பூராவும் அகதிகள், மரணம் சிறை, சிததிரவதை... இதைப்பற்றியெல்லாம் சிந்திக்க இவர்களுக்கு எங்கே நேரம் இருக்கிறது? தொடர்ந்து யுத்தம நடத்த வேண்டும். அதில் மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவது பற்றி இவர்களுக்கு எந்தக் கவலையுமில்லை வருடம் 2000கோடிசெலவழித்து அரசு மரணச் சடங்குகளை நடததுவதும், தமிழர்களை அகதிகளாக மாற்றுவதுமான காரியங்களைச் செய்து வருகிறது..

ஆனால் அநியாயமாக இரத்தம் சிந்துவதைத் தவிர்த்து தேசிய இனப் பிரசசினைசகு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்பது பற்றி, யுத்தம் நடாத்தும் சக்திகளுக்கு எந்தச் சிந்தனையும் கிடையாது,



என்று முடியும் இந்த அகதி வாழ்க்கை?

## தொடரும் வன்முறைகளுக்கு மாற்றீடாக...

(லண்டனிலிருந்து நமது பிரதிநிதி)

இலங்கையில் நீதிக்கும் ஜனநாயகத்திற்குமான குழுவினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சர்வதே மாநாடு கடந்த கார்த்திகை 20ம், 21ம் திகதிகளில் இலண்டன் பல்கலைக்கழக, கல்லூரி மண்டத்தில் நடைபெற்றது.

இலங்கையில் ஜனறாயக சமுதாயத்தைக் கட்டி எழுப்பத் தடையாக இருக்கும் காரணிகளை இனங்கண்டு, அவற்றிற்கெதிராக ஜனநாயக மக்கள் போராட்டங்களை ஊக்குவுவித்து, ஆதரவளிப்பதை நோக்கமாகக் கொண்டு ஒழுங்கு செய்யட்டிருந்த இம்மாநாட்டில், இரண்டு நாட்கள் பல தலைப்புக்களில் கருத்தரங்குகளும், கலந்துரையாடல்களும் இடம் பெற்றண.

இம்மாநாட்டிற்கு, ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கவும், கலந்துரையாடல்களில் பங்குபற்றவும் இலங்கையிலிருந்தும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் பல அறிஞர்கள், பத்திரிகையாளர்கள் சமூகமளித்திருந்தனர். பிரித்தானியாவிலுள்ள இலங்கை தொடர்பான வேலைகளில் ஈடுபட்டிருக்கும், அரசுசார்பற்ற நிறுவனங்கள் சிலவற்றின் பிரதிநிதிகளும் பிரசன்னமாயிருந்தனர்.

இம்மாநாட்டை அங்குரார்ப்பணம் செய்துவைத்து உரை நிகழ்த்திய பிரித்தானிய தொழிற் கட்சிகளின் ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினரான கிறிஸ்ரீன் ஒடி, இலங்கையில் தேர்தல்கள், இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தைகள், பாராளுமன்றம் என்ற தோற்றப்பாடுகள் இருப்பதுபோல் தோன்றினாலும், அங்கு அடிப்படை ஜனநாயகத்திற்கான எந்த இயல்புகளும் இல்லை என்பதே கசப்பான உண்மையாகும் என்று கூறினார். இம்மாநாட்டின் முதல்நாள், இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, அரசியல் யாப்பு மாற்றியமைக்கப்பட வேண்டிய அவசியமும் அதிகாரப் பரவலாக்கமும் ஆகிய தலைப்புக்களில் நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் ஆய்வுக்கட்டுரை ஒன்றைச் சமர்ப்பித்து உரை நிகழ்த்திய ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் பிரதம பேச்சாளரும், அரசியற் பீட உறுப்பினருமான தோழர் சேதீவரன், இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நீதியானதும், நிரந்தரமானதுமான தீர்வொன்று காண்பதென்பது அதிகாரப் பரவலாக்கம், ஜனநாயக மயமாக்கல் ஆகிய அம்சங்களைக் கொண்டதாக அமைவதுடன், தற்போது நிலவும் ராணுவ மயமாக்கப்பட்டுள்ள நிலைமை முழுமையாகக் களையப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

யுத்த நிறுத்தம், சமாதானம், சமாதான வளையங்கள் பற்றி சர்வதேச சமூகப் பிரதிநிதிகளினால் ஆங்காங்கு பேசப்படுவது பற்றிக் குறிப்பிட்ட அவர், யுத்த நிறுத்தமும், இனப் பிரச்சினைக்கான அரயல் தீர்வும், இரு வேறு விடயங்கள் எனவும், புலிகளுக்கும் அரசிற்குமிடையில் யுத்த நிறுத்தத்திற்கான அவசியம் இருக்கும் அதே வேளையில் நியாயமானதும், நிரந்தரமானதுமான அரயல் தீர்வென்பது அரசிற்கும் தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளுக்குமிடையில் ஏற்படுத்தப்படவேண்டியதொன்றென்றும் சுட்டிக்காட்டினார். அத்துடன் ஜனநாயக, முற்போக்கு, மதசார்பற்ற சக்திகளுக்கும் இவ்விடயத்தில் ஒரு பாரிய பங்குள்ளதென்பதையும் சுட்டிக் காட்டினார். மேலும் இனப்பிரச்சினையின் இன்றைய நிலை பற்றியும், அந்நிலை ஏற்படுத்தப்பட்டமைக்கான அடிப்படைக் காரணிகள் பற்றியும் பல பரிமாணங்களிலும் விரிவாக ஆய்வு செய்யப்பட்டிருந்தது.

-தொடர்ச்சி 7ம் பக்கம் ☞

படிப்பகம்

www.padippakam.com





# மன்னார் அவலம்

இலங்கையின் ஆகப் பெரிய அகதிகள் முகாம் இங்குதான் இருக்கிறது. மடு அகதிகள் முகாமில் வசிக்கும் 29,000 பேரில் 8,000 பேர் வவுனியாவைச் சேர்ந்தவர்கள். அரசுக்கும் புலிகளுக்குமிடையேயான போட்டா போட்டியில் இவ் அகதிகள் பகடைக் காய்களாக உருட்டப்படுகிறார்கள்.

தான் விடுவித்த பிரதேசமெனக் கூறும் பகுதிகளுக்குள் இவ் அகதிகளைக் கொண்டுவருவதற்காக, அரசானது உணவு விநியோகம், அடிப்படை வசதிகளைக் குறைத்துக் கொண்டு வந்தது. இதன் விளைவாக இங்கு உணவுப் பொருட்கள், மற்றும் அத்தியாவசியப் பொருட்களை விநியோகித்து வரும் யு.என்.எச்.சீ.ஆர் பிரதிநிதிகளுக்கும் அகதிகளுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இந்த மோதலுக்கு யார் சூத்திரதாரிகளாக இருந்தாலும், தற்போது இந்த அகதிகள் பட்டினியால் வாடிக் கொண்டிருக்கிறார்கள். சுகாதாரச் சீர்கேடுகளால் நோய்கள் பரவிக்கொண்டிருக்கின்றன.

தவிர, இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட அகதிகளுள் ஒரு பகுதியினர் பேசாலையில் உள்ள ஒரு முகாமில் வைக்கப்பட்டுள்ள்னர். சொந்த இடங்களுக்கு திரும்பிச் செல்ல முடியாத நிலையில் வாழும் இவர்களுடைய நிலைலமை இந்தியாவில் இருந்ததைவிட மோசமாகி இருக்கிறது.

பிரதான நிலப்பகுதிக்கும் தீவுக்குமிடையே போக்குவரத்துக்கள் இல்லை என்றே கூறலாம். அல்லது மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நடைபெறுகிறது. உதாரணமாக மாந்தைப் பகுதியிலுள்ள ஒருவர் சிறுநாவற்குளத்தில் உள்ள உறவினர் ஒருவரின் மரண வீட்டுக்குச் செல்ல வேண்டும். இங்கிருந்து பார்க்கையில் கண்ணுக்கெட்டிய தூரத்தில் உறவினர் வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சிகள் தெரிந்தாலும், மரண வீட்டு அழுகைஒலி கேட்டாலும், அவர் அங்கு நேரடியாகச் செல்ல முடியாது. அவர் படகில் அல்லது கப்பலில் கற்பிட்டி சென்று, பின்னர் மதவாச்சிக்கோ, வவுனியாவிற்கோ வந்து அங்கு உரிய அனுமதியைப் பெற்றுத்தான் செல்ல வேண்டும்.

கற்பிட்டி-மன்னார் படகுச் சேவையும், வாரத்திற்கு எல்லா நாட்களுக்கும் என்றில்லை. மன்னார் பாதிரியார் ஒருவராலும், கச்சேரியாலும் ஒழுங்கு செய்யப்பட்ட படகுகள் சேவையில் ஈடுபடுகின்றன. ஊரடங்குச் சட்டம் அடிக்கடி இங்கு அமுலுக்கு வருவதால் மூடுண்ட சூழ்நிலையிலேயே தீவில் உள்ளவர்கள் வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணத்திற்கு அடுத்தபடியாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் இங்கு விஷம்போல் ஏறியுள்ளன. அசாதாரண சூழ்நிலையில் இது மேலும் அதிகமாகும். அத்தோடு அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகமாகவே இருக்கிறது.

தொழில் வாய்ப்புக்கள் குறைவாக இருப்பதால் அன்றாடங்காய்ச்சிகள் பட்டினியால் வாடுகிறார்கள். தீவில் மீன்பிடி பிரதான தொழிலாக இருப்பதால் கடலுக்குச் செல்ல முடியாத சூழ்நிலையில் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவித்து வருகிறார்கள். மட்டுப்படுத்தப்பட்ட அளவில் மீன்பிடி அனுமதி இருந்தாலும் இங்குள்ள பெருந்தொகையான மீனவர்கள் எதுவும் செய்ய முடியாதவர்களாகவே இருக்கிறார்கள். எரிபொருள் தட்டுப்பாடு, படகுகள், கடன் வசதிகள் எதுவுமே இல்லை.

மன்னார் பெருநிலப்பகுதி விவசாயம், இலங்கையின் நெல் தேவையைப் பெருமளவில் பூர்த்தி செய்தது. இன்று பாலைவனங்களாகக் காட்சியளிக்கின்றன. உரம், இரசாயனப் பொருட்கள், விவசாயக் கடன்கள் எதுவுமே இல்லாத நிலையில் இந்நிலப் பகுதி மக்கள் ஒரு விதமான அகதி வாழ்க்கையையே மேற்கொள்கிறார்கள்.

கட்டுக்கரைக் குளத்தின் தாங்கிகள் உடைக்கப்பட்டு விட்டதால் மன்னார், வங்காலைப் பகுதிகளுக்கான நீர் விநியோகம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பாடல் பெற்ற திருத்தலமான கேதீஸ்வரர் ஆலயம் யுத்த சோகத்தின் அடையாளங்கள் பதித்த சாட்சியாக நின்றுகொண்டிருக்கிறது. புலிகள்–இராணுவ மோதலில் பாதுகாப்ப ணாகப் பாவிக்கதுப்பட்டதன் விளைவ இவ் ஆலயம் மோசமாகச் சேதமடைந் துள்ளது.

யு.என்.எச்.சீ.ஆர், சிறுவர் பாதுகாப்ப நிதியம் ஒன்றை உருவாக்கி அனாதைச் சிறார்களைப் பராமரித்து வந்தது.

மன்னார் துயர் துடைப்புச் சங்கம் வாழ்வோதயம் போன்ற அமைப்புக் களும் மக்கள் துயர் துடைப்புப் பணி களில் ஈடுபட்டுவருகின்றன.

இங்கும் இனந்தெரியாதோரால் ஆட் கள் கடத்தப்படும் சம்பவங்கள் நிகழ் கின்றன. சட்டம்-ஒழுங்குத் துறையில் தண்டனை, இடமாற்றம் பெற்றவர்கள் இங்கு வேலைசெய்யும் நிலவரம் நிலவுகிறது. இதனால் மனித உரிமை மீறல்கள் அதிகமாகவே நடைபெறுகின்றன. செஞ்சிலுவைச் சங்கம் போன்ற அமைப்புக்கள் இங்கு மனித உரிமை தொடர்பான விடயங்களைக் கவனிக்கின்றன.

ஆண்டாண்டு காலமாக தமிழர்களுடன் உற்ற சுற்றமாக வாழ்ந்த முஸ்லிம்கள் மன்னாரிலிருந்து புலிகளால் விரட்டியடிக்கப்பட்டு மூன்றரை ஆண்டுகள் ஆகிவிட்டன. அவர்கள் அகதி முகாம்களில் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகிறார்கள். எல்லாவற்றையும் பறிகொடுத்து உடுத்த துணியுடன் சென்ற அவர்கள் பிச்சை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.. தொழில் வாய்ப்பு உள்ளவர்கள் திரும்பியுள்ளார்கள். ஆனால் மன்னார் நகரம் தொழில் வாய்ப்புக்கள் மிகவும் குறைந்த இடம்.

கப்பல், படகுப் போக்குவரத்துக்கள் குறைவாக இருப்பதாலும், அடிக்கடி ஊரடங்கு ஏற்படுவதாலும் தமிழ்ப் பத்திரிகைகள் கூட இங்கு கிடைப்பதரிது. நூல் நிலையத்திலும் சில அரச காரியாலயங்களிலும் மாத்திரமே பத்திரிகைகள் காணக் கிடைக்கின்றன.

# மலையக மக்கள் நலன் தொடர்பான சக்திகள் ஐக்கியப்பட வேண்டும்

பெருந்தோட்டங்கள் தனியாரிடம் கையளிக்கப்பட்டதன் பின்பு மலையக மக்கள் புதிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். வேலை நாட்களைக் குறைத்து, வேலை நேரத்தை அதிகரித்து, ஊதியத்தை குறைப்பதன் மூலம், அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலைக்கே தள்ளப்பட்டுள்ளார்கள். தோட்டங்களை கையேற்றவர்கள் அங்கு காய்கறி, வாழை போன்ற மாற்றுப் பயிர்ச் செய்கை பற்றியும் யோசித்து வருகிறார்கள். இதனால் தோட்டத் தொழிலாளர்கள் வேலை இழப்பு என்ற அபாயத்தையும் எதிர்நோக்குகின்றார்கள். தொழிற் சங்கங்கள் போராட்ட முஸ்தீபுகளை மேற்கொண்டால் அதற்கும் அச்சுறுத்தல் விடுக்கப்படுகிறது. ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசும்போது, கிராமப்புறங்களில் வாழும் மக்களைவிட மலையக மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்தது என்று கூறியுள்ளார். அரசாங்கத்தின் வீடமைப்புத் திட்டங்களில் எதுவும் மலையக மக்களுக்கு தொடர்பற்றவை. அவர்களுடைய தோட்ட முதலாளிகள் 150 வருட பழமை வாய்ந்த லயன்களைக்கூட புனரமைத்துக் கொடுக்கத் தயாரில்லை.

## குறிஞ்சிச் சாரல்



மலையக மக்கள், அங்கு நிரந்தரமாகிவிடக்கூடாது என்பதில் பேரினவாதிகள் எச்சரிக்கையாகவே இருக்கிறார்கள். மறுபக்கம் மலையகப் பிரதேசங்களில் இம் மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களை சீர்குலைப்பதற்காக, தொடர்ந்து சிங்களவர்கள் குடியேற்றப்படுகிறார்கள். வடக்குக் கிழக்கு போராட்டமாக இருந்தாலும், தென்னிலங்கையில் ஜே.வி.பி போன்றவற்றின் கிளர்ச்சி நடவடிக்கைகளானாலும் சரி, இம்மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 15 வருடங்களாக ஐ.தே.க பதவியில் இருப்பதற்கு, இம் மக்களின் ஆதரவு பிரதான காரணிகளில் ஒன்றாகும். ஆனால் அவர்கள் ஆட்சியாளர்களின் பார்வையில் வெறும் வாக்காளர்தான். தோட்டங்கள் தனியாரிடம் கையளிக்கப்படுவதைஆரம்பத்தில்இ.தொ.கா ஆதரித்தபோதிலும், தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைபற்றி, தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துள்ளது.

மலையக மக்களை பிரதிநிதித்துவப் படுத்துபவர்களாக 16 மாகாணசபை உறுப்பினர்கள், 5 பாராளுமன்ற உறுப்பினர்னகள். இவர்களில் மூவர் அமைச்சர்களாக இருந்தும், அடிப்படையில் சில காரியங்களை ஆற்ற முடியாத நிலமையே நிலவுகிறது

கடவுச் சீட்டு பெற்ற ஒரு இலட்சத்து 69 ஆயிரம்பேர் இன்று நாடற்றவர்கள் என்ற திரிசங்கு சொர்க்க நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**குமார்**

தோட்டங்களில் வேலையற்ற நிலமை தொடர்பாக மாற்றுத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். அம்மக்களின் அடிப்படைப் பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தோட்டங்களில் வேலை இழந்தவர்களுக்கு திட்டவட்டமான மாற்றுப் பொருளாதாரத் திட்டங்கள் முன்வைக்கப்பட வேண்டும். இம்மக்கள் செறிவாக வாழும் பிரதேசங்களில் இவர்களுக்கு இது விடயத்தில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். ஆனால் இப் பிரதேசங்களில் குடியேற்றப்படும் சிங்கள மக்களுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.


-தொடர்ச்சி 6ம் பக்கம் ☞

படிப்பகம்

www.padippakam.com



# புலி இல்லா ஊரில் பிழை பிடிக்கப் பலருண்டு வழி சொல்லித் துணைக்கு வர யாருமுண்டோ?



இந்த அரசியல் இருக்கிறதே, அது வழியில் படுத்துக் கிடக்கும் நாய் மாதிரிதான். யார் வேண்டுமானாலும் எட்டி உதைக்கலாம்.

அரசியல் ஒரு சாக்கடை என்று பெர்னாட்ஷோவோ – அல்லது வேறு யாரேனுமோ சொல்லிவிட்டுப் போனாலும் போனார்கள். அரசியலைக் கொச்சையாக வர்ணித்து யார் வேண்டுமானாலும் எப்படி வேண்டுமானாலும் எழுதலாம் என்பதும், அவ்வாறு எதை எழுதினாலும் யாரும் அதற்கு எதிர்ப்புச் சொல்லப் போவதில்லை என்பதும் ஒரு வசதியாக நடைமுறையில் இருந்து வருகிறது.

## தோழரசிப் பொடி எழுதுகிறார்

எனவே மனதில் படுவதைச் சொல்லிவிட்டுப் போய்க்கொண்டிருப்பதெல்லாம் அரசியல் விமர்சனங்களாகக் கருதும் நிலைமை தோன்றியிருக்கிறது.

சரியானதைக் கண்டுபிடித்துச் சரியானதைச் செய்ய வேண்டியது அரசியல்வாதியின் வேலையாகவும், அதில் பிழைபிடித்துக் கொண்டிருப்பது மட்டும் விமர்சகனின் வேலையாகவும் உங்களுக்குச் சொல்லப்படுகிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். உங்கள் பங்குக்கும் சில உதைகளைத் தருவதில் உங்கள் யாருக்கும் ஆட்சேபமிருக்கப் போவதில்லை. சிலர் பெரியமனது பண்ணித் தங்கள் பணிவுமிக்க உதைகளையும் சமர்ப்பிக்கலாம்.

விஷயம் என்னவென்றால், தீர்வைக் கண்டுபிடிப்பது அரசியல்வாதிகளின் வேலை என்றும், அதில் பிழை கண்டுபிடிப்பதுதான் பத்திரிகையாளனின் கடமை என்றும் ஒருவித வேலைப் பங்கீட்டு முறை இப்போது முனவைக்கப் பட்டிருக்கிறது. சரியான தீர்வு தெரிந்தால் பத்திரிகையாளரே அரசியல் கட்சியை அமைத்து விடுவார், எனவே அவருக்குச் சரியான தீர்வு என்னவென்று தெரியாதென்றும் சொல்லப் படுகிறது. சரியானது என்னவென்று தெரியாத அந்தப் பத்திரிகையாளர், அப்படியானால் பிழைபிடிக்கக் கையாளும் அந்த 'ஞானதிருஷ்டி' என்னவென்றாவது கோடிகாட்டக்கூடாதா?

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியைப் பொறுத்தவரை, தமிழ் மக்களுக்குக் கிடைத்த இடைக்காலத் தீர்வாக மாகாண சபையை ஏற்றுக் கொண்டது. புலிகளும் சிறீலங்கா அரசாங்கமும் இணைந்து கொண்டு மாகாண சபைக்கெதிரான முட்டுக் கட்டைகளைப் போட்டார்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி மாகாண சபைகளுக்கென்று ஒப்புக் கொண்ட அதிகாரங்களைக்கூட சிறீலங்கா அரசாங்கம் வழங்க முடியாமலிருந்தது. இந்நிலையில் மாகாண சபைக்கு என்னென்ன அதிகாரப் பரவலாக்கல்கள் நடைபெறவேண்டும் என்பதை 19 அம்சக் கோரிக்கையாக ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைத்தது.

அதேசமயம் புலிகளோ, தமிழ் மக்களுக்கான தீர்வு முயற்சிகளைக் குழப்புவதில் தீர்மானகரமான பாத்திரத்தை வகித்தனர். தமிழ் மக்கள் மத்தியிலிருந்து எந்தவொரு அமைப்போ அரசியல் கட்சிகளோ இயங்க முடியாத அளவிற்கு வலிமை மிக்க பாசிச சக்திகளாய் இன்று அவர்கள் உள்ளனர். அதுமட்டுமில்லாமல், எல்லா இயக்கங்களையும் தடைசெய்து ஒற்றுமையைச் சிதைத்து விட்டதன்மூலம் போராட்ட இலக்கையும் நீண்ட காலத்துக்குப் பின்தள்ளியுள்ளனர்.

கொழும்பில் பத்திரிகை மட்டும் நடத்திக் கொண்டிருக்கிறவர்களுக்கோ 'புலிகளை விட்டுவிடுங்கள்' என்று வலுசுளுவாகச் சொல்லமுடிகிறது. வேறெந்தப் பொறுப்புணர்ச்சியும் இல்லாதவர்களாகக் கிண்டல் பண்ணிக் கொண்டிருப்பதுதான் 'ஜேர்ணலிஸம்' என்று கருதுகிறார்கள்.

வடக்கு கிழக்கிலிருந்து ஏனைய இயக்கங்கள் கட்சிகள் எதுவும் இயங்க முடியாதவாறு புலிகள் தடை செய்திருப்பதானது இவர்களுக்கு கேலிக்கும் ஏளனத்திற்குமுரியதாகத்தான் தெரிகிறதே தவிர, அதிலுள்ள பாசிசத் தன்மையும், யாரையும் இயங்க விடாத – எந்தத் தீர்வையும் வரவிடாத – தமிழ் மக்களுக்கு விரோதமான கொடூரத் தன்மையும் இவர்களுக்குத் தெரிவதில்லை. எனவே, புலி என்ற ஒன்றே இல்லாமல் போய்விட்டது போலவும், மற்றவர்கள் என்ன செய்கிறீர்கள் என்று பெரிய மனிதத் தோரணையோடு தங்களது சிறுபிள்ளைத்தனமான கேள்விகளைக் கேட்க முடிகிறது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தற்போது சாத்தியமாகக் கூடிய இடைக்காலத் தீர்வுத் திட்டமொன்றை முன்வைத்து, அதற்காகச் செயற்பட்டு வருகிறது. தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடும் அரசியல் கட்சி என்ற வகையில், இந்த வருட ஆரம்பத்தில் நடைபெற்ற அதன் இரண்டாவது காங்கிரஸ் நிறைவேற்றிய அரசியல் திட்டம் ஒன்றையும் அது கொண்டுள்ளது.

அந்த அடிப்படையில்தான், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி முன்வைக்கும் தீர்வானது நடைமுறைச் சாத்தியமற்றது அல்லது பிழையானது என்று கருத்துக் கொண்டிருப்பவர்கள், தாங்கள் சரியென்று கருதும் தீர்வைப் பற்றிச் சொல்ல வேண்டும் என எதிர்பார்க்கிறது.

அதைவிடுத்து, 'எது தீர்வு என்று தாம் கருதுகிறார்களோ அந்த முடிவுக்காகப் போராடுவது விடுதலை இயக்கங்களின் பணி; எல்லாவற்றிலும் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதுதான் பத்திரிகையாளனின் பணி' என்று மழுப்பல் விடுவதைக் கண்டிக்கிறது.

தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒவ்வொருவரும் தீர்வென்று கருதிக் கொண்டு போராடும் எல்லாப் போராட்டமுமே சரியாகி விடுமா? எல்லாப் போராட்டங்களுமே நியாயமானவையும் சரியானவையும்தானா? யூதர்களைக் கொளுத்த வேண்டும் என்று ஹிட்லரின் ஆட்கள் போராடியதும் சரிதானா? பொல்போட் போராட்டமும் நியாயம் தானா? எல்லோர் கருதும் தீர்வுகளும் ஒரே மாதிரிச் சரியாக இருக்க முடியாது என்பதை நாம் புரிந்து கொண்டால், சரியான தீர்வைப் பற்றி நாம் பேச வேண்டிய தேவையையும் புரிந்து கொள்ளலாம்.

செயற்படுத்தக்கூடிய சரியான ஒரு தீர்வையும் அதற்கான வழிமுறைகளையும் வரையறுத்துச் சொல்லிவிட்டு, அப்படி அல்லாதவை எவ்வாறு தவறுகளாகின்றன என்று சுட்டிக் காட்டுவது பயனுள்ளது; மற்றவர்களால் புரிந்து கொள்ளப்படவும் கூடும்.

அப்படியில்லாமல், 'புலிகளைத் தவிர்ந்த தமிழ்க் கட்சிகள் ஏன் இப்போது ஆயுதப் போராட்டம் நடத்தாமலிருக்கிறார்கள்? தமிழ் மக்களை அணிதிரட்டி ஊர்வலமோ ஆர்ப்பாட்டமோகூட நடத்தாமலிருக்கிறார்கள்?' என்று ஏதோ இப்பத்தான் வானத்திலிருந்து வந்து விழுந்தவர்களைப்போல் பாணியம் விட்டுக் கொண்டிருந்தால், அவர்களுக்கு சென்ற இதழ் வினாயக மூர்த்தியின் கட்டுரையைத்தான் திரும்பவும் சொல்ல வேண்டும்.

---

★ தமிழ் மக்களுக்கு சுயாட்சி அமைப்பு ஒன்று உருவாக்கப்பட வேண்டும், அதற்கான அதிகாரங்கள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும், வட–கிழக்கு இணைந்த ஓர் அரசியல் அலகு உருவாக்கப்படல் வேண்டும். இவற்றின் ஊடாகவே தமிழ் மக்கள் கௌரவத்துடனும் சுதந்திரத்துடனும் வாழக்கூடிய சூழ்நிலை உருவாகும் எனக் கருதுகின்றோம்.

இப்படியான ஓர் நிலையை வெறுமனே பேச்சுவார்த்தை மூலம் பேசித் தீர்த்துவிடலாம் என நாம் நம்பவில்லை. சர்வதேச நெருக்குதல்கள், மக்கள் அபிப்பிராயத்தைத் திரட்டுதல் போன்றவற்றின் ஊடாகவும், இலங்கை அரசு சிங்கள இனவெறிக்குள் கட்டுண்டு பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை வைக்க இயலாமையை அம்பலப்படுத்துவதன் ஊடாகவும், சிங்கள ஜனநாயக முற்போக்கு சக்திகள் மத்தியில் எமது நிலையை தெளிவுபடுத்துவதன் மூலமாகவும் மேற்கண்ட சூழலை உருவாக்க நாம் முயற்சித்து வருகின்றோம்...

★ அரசினாலும் புலிகளாலும் ஜனநாயக உரிமைகள் முற்றாக மறுக்கப்பட்ட மக்கள் வெளியில் வந்து கருத்துச் சொல்ல முடியாத நிலை நிலவுகின்றது. எனவே, எமக்கு சாதகமான நிலையில் உள்ள அத்தனை வழிகளையும் பயன்படுத்தி வருகின்றோம்.

சிறுபான்மைத் தேசிய இனத்தின் மீதான அடக்குமுறைக்கு எதிராக, அவர்களது அடிப்படை உரிமைகளுக்காக போராடுவதே எமது பணி. இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஓர் அரசியல் தீர்வுக்கான ஆரம்ப நடவடிக்கையாக இருந்தது. எமது மக்களின் துரதிர்ஷ்டம், புலிகள்–அரசு கூட்டுச் சதியின் விளைவாக அவ் ஒப்பந்தத்தின் பலாபலன்கள் எம் மக்களுக்குக் கிடைக்காமல் செய்யப்பட்டது. இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை பேரினவாத சக்திகள் புரிந்துகொண்ட அளவிற்கு தமிழர் தரப்பில் புலிகளோ புத்திஜீவிகளோ வேறு சில அரசியல் சக்திகளோ இன்னும் புரிந்து கொள்ளவில்லை...

★ மாகாணசபை இடைக்காலத் தீர்வு மாத்திரமல்லாமல், நிரந்தரத் தீர்வு ஒன்றிற்கான பேச்சுவார்த்தையைத் தொடங்குவதற்கான சிறந்த அடித்தளமும் கூட. ஆகவே, மாகாணசபை முறையை முற்றுமுழுதாக நிராகரிப்பது என்பதற்குப் பதிலாக அதனை இன்னும் செழுமைப் படுத்துவது என்பதே சரியாக இருக்கும்.

அதாவது, தற்காலிக இணைப்பு நிரந்தரமாக்கப்படுதல், மேலதிக அதிகாரங்களை பகிர்ந்தளித்தல், இணைப்பாட்சி முறை ஒன்றை உருவாக்கல் இதனை நோக்கியே எமது அணுகுமுறைகள் இருக்க வேண்டும் என நான் கருதுகின்றேன்.

– 'சரிநிகர்' பேட்டியில் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

---

## இனச் சிறுபான்மை...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கொள்ளப்பட வேண்டும். அதிலுள்ள குறைபாடுகள் நிவர்த்திப்பதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுவதோடு, செழுமைப்படுத்தவும் வேண்டும்.

அதிகாரப் பரவலாக்கல் அலகு தொடர்பான பிரச்சினையில் இணைக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணத்தில் ஒருங்கிணைக்க்ப்பட்ட அரசியல்-நிர்வாக உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். ஒரு விடயத்தை இங்கு மறந்துவிடக் கூடாது. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழ் அரசியல்-இராணுவ அமைப்புக்கள் பிரதான அரசியல் நீரோட்டத்தில் இணைந்துகொண்டதானது வட கிழக்குப் பிராந்தியம் தமிழர்களுடைய வரலாற்று ரீதியான வாழ்விடம், இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடு, பல மொழி பேசும் மக்கள் வாழும் நாடு என்ற அடிப்படையிலேயே.

இன்னொரு விடயம் இங்கு கருத்திற்கெடுக்கப்பட வேண்டும். வடகிழக்கு மாகாணத்தைப் பிரிப்பது அது தமிழர்களின் பாரம்பரியமான வாழ்விடம் என்ற கொள்கைக்கு முரணானது. அதேபோல் சமூக, பொருளாதார, பாதுகாப்பு விடயங்களும் கருத்திற்கெடுக்கப்பட வேண்டும்.

இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாகாணங்களைப் பிரிக்கும் முயற்சி ஐக்கிய இலங்கைக்குள் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதைச் சாத்தியமற்றதாக்கும்.

படிப்பகம்

www.padippakam.com



# இனிய தமிழ் மக்களே!...

அன்பிற்கினிய தமிழ்மக்களுக்கு,

சிறீலங்கா அரசாங்கத்தின் சில சதிகார நடவடிக்கைகளை நீங்கள் அறிந்து கொள்வதும், அதற்கெதிராக நாமெல்லோரும் ஒன்றுபடுவதும் இன்றைய அவசரத் தேவையென நாம் கருதுகின்றோம்.

வடக்கையும் கிழக்கையும் பிரித்து, கிழக்கு மாகாணத் தமிழ் மக்களை இருந்த இடம் தெரியாமல் செய்யவேண்டுமென்பதில் சிறீலங்கா அரசாங்கம் தீவிரமாக உள்ளது.

அன்பார்ந்த தமிழ் மக்களே! இலங்கை சுதந்திரமடைந்த காலம் தொடக்கம் இன்றுவரை, அரசாங்கம் ஏற்படுத்திவரும் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களினால், கிழகக்கு மாகாணத்தில் பெரும்பான்மையாக இருந்த நாம், இன்று சிறுபான்மை ஆக்கப்பட்டு வருவதை எல்லோரும் அறிவீர்கள். இலங்கை சுதந்திரமடைந்த 1948 ஆம் ஆண்டிலிருந்து 60 வரை சிங்களப் பிரதிநிதித்துவமே இல்லாமல் இருந்த அம்பாறை மாவட்டத்தில் இருந்து இன்று பல சிங்களப்பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுமளவிற்கு, அங்கு சிங்களக் குடியேற்றம் நடந்துள்ளது. இன்று அம்பாறை மாவட்டத்தில் தமிழ் மக்கள் 20 வீதமே உள்ள மூன்றாவது சிறுபான்மை இனமாக மாற்றப்பட்டுள்ளனர்.

இதைப்போன்றே திருகோணமலையிலும் கந்தளாய், தம்பலகாமம், சேருவாவில, மணலாறு போன்ற பல சிங்களக் குடியேற்றங்களின் மூலம் தமிழ் மக்கள் சிறுபான்மையாக்கப்பட்டு வருகின்றார்கள். சேருவாவில என்ற பெரும் நிலப் பரப்பே சிங்களத் தொகுதி ஆக்கப்பட்டுள்ளது. இன்றும்கூட கோயில் காணிகளிலும் சிங்களக் குடியேற்றம் நடந்து வருவதை நாம் கண்கூடாகக் கண்டு வருகின்றோம்.

மொத்தத்தில் முழு கிழக்கு மாகாணமுமே சிங்கள மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட இடமாக மாற்றப்பட்டு வருகின்றது. வடக்கும்,கிழக்கும் இரண்டு மாகாண சபைகளாக இருக்கும் பட்சத்தில், கிழக்கு மாகாணம் நிச்சயமாக தமிழ் மக்கள் கையைவிட்டுச் சென்று, தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழ் இனமே அங்கு அழிக்கப்பட்டுவிடும். இதற்கு இருக்கக்கூடிய ஒரே மாற்றுத் தீர்வு வடக்கும் கிழக்கும் இணைந்த ஒரே மாகாணத்தை உருவாக்குவதே.

> புலிகள், முழு கிழக்கு மாகாணத்தையுமே இராணுவத்தினருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தனர். புலிகளின் கோரத் தாக்குதலில் பாதிக்கப்பட்ட பல தமிழ் இயக்கங்கள் புலிகள் காட்டிய வழியில் அவர்களும் அரசாங்கத்துடன் நின்று செயற்படத் தொடங்கினார்கள்.

இலங்கை-இந்திய ஒப்பந்தத்திலும்கூட வடக்கும் கிழக்கும் தற்காலிகமாக இணைக்கப்பட்டு, இணைந்த வடக்கு கிழக்கு மாகாண சபையே உருவாக்கப்பட்டது. தற்காலிகமாக இணைந்த இவ இணைப்பை நிரந்தரமாக்காமல், கிழக்கு மாகாணத்தில் சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி வடக்கையும் கிழக்கையும் பிரித்து இரண்டு மாகாணங்களாக்க அரசு முனைந்து வருகின்றது

முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவபடுத்தும் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் வடகக்கும் கிழக்கும் பிரிக்கப்பட வேண்டுமென்பதற்காக அயராது பாடுபட்டு வருகின்றார்கள். ஆளும் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, எதிர்க் கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சி போன்றவையும் இவ்விடயத்தில் மிகவும் உறுதியாகச் செயற்பட்டு வருகின்றனர்.

கிழக்கில் தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாகக் கூறும் சில பாராளுமன்ற உறுப்பினர்களும்கூட அரசாங்கத்தின செல்லப்பிள்ளைகளாக - நட்பு சக்திகளாக இருந்து தம்மை எப்படி வளர்த்துக் கொள்ளலாம் என்று பார்க்கின்றார்களே தவிர, அரசாங்கத்தின் இச் சதி நடவடிக்கைகளுக்கெதிராக குரல் கொடுக்க வேண்டும் என்பதில் அக்கறையற்றே இருக்கின்றனர். வடக்கும் கிழக்கும் பிரிகக்படுவதென்பது எதிர்காலததில எவவளவுதூரம் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை இவர்கள் புரிந்து கொள்ளாமல் இருப்பது வருந்தத்தக்கது.

இனிய தமிழ் மக்களே!

கிழக்கு மாகாணத்தில் உள்ளூராட்சித்தேர்தலையும், அதனைத் தொடர்ந்து வடக்கு கிழக்கு பிரிக்கப்படுவது தொடர்பான சர்வஜன வாக்கெடுப்பு ஒனறை நடத்துவதற்கும் அரசு தி ட மிட்டிருக்கின்றது

உள்ளூராட்சித் தேதல எனபது, அங்கு பிரதேச சபைகள், நகர, மாநகர சபைகளைச செழுமையாக இயங்க வைப்பதற்காக நடத்தப்படப் போவதில்லை. மாறாக, கிழக்கு மாகாணத்தில் சகஜநிலை திரும்பி விட்டது என்பதை உலகுக்குக் காட்டவும், உள்ளூராட்சி தேர்தல்நடந்தால் அதனைத்தொடர்ந்து சர்வஜன வாக்கெடுப்பை நடத்தலாம் என்பதற்காகவுமே இத்தேர்தலை நடத்த முயற்சித்து வருகின்றாாகள்.

இப்படிச் செய்வதன்மூலம் சர்வதேச ரீதியாக வடக்கு கிழக்கு இணைப்புக்கு தமிழ் மக்களின் ஆதரவு இல்லை என பதையும் இவர்கள் காட்ட முயற்சிக்கின்றார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் யாழ்ப்பாணத்துக்கு எதிரான ஒரு பிராந்திய வாதத்தை பொலீஸ் மற்றும் இராணுவத்தினர் ஏற்படுத்தி வருவதுடன், தேர்தலுக்கு எல்லோரையும் தயாராகும்படியும் வற்புறுத்தி வருகின்றனர்.

எனவே, அன்பிற்கினிய தமிழ் மக்களே! அரசாங்கத்தின் இக்கபடத்தனமான சதி நடவடிக்கைகளை இன்றே நாம் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

புலிகளின் அதிகார மோகத்தினால் பிரேமதாசா அரசாங்கத்துடன் கூட்டுச் சேர்ந்து வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைத்தார்கள். அதுமாத்திரமல்லாமல், தமிழ் மக்களின் பாதுகாப்புக்கென உருவாக்கப்பட்ட தமிழ் பாதுகாப்புப் படையும் இவர்களது கூட்டு நடவடிக்கையால் சின்னாபின்னமாக்கப்பட்டது.

பின்னர் அரசாங்கத்துடன் ஏற்பட்ட மோதலில் புலிகள், முழு கிழக்கு மாகாணத்தையுமே இராணுவத்தினருக்குத் தாரைவார்த்துக் கொடுத்தனர். புலிகளின் கோரத் தாககுதலில் பாதிக்கப்பட்ட பல தமிழ் இயக்கங்கள் புலிகள் காட்டிய வழியில் அவர்களும் அரசாங்கத்துடன் நின்று செயற்படத் தொடங்கினார்கள்.

புலிகளைக் காட்டிக் கொடுபபது, அழிப்பது என்றவிடயத்தில் தொடங்கிய இவர்கள், இன்று தமக்கு விருமபாத சகலரையும் காட்டிக் கொடுப்பது, அவர்களை அழிப்பது என்ற அடிப்படையிலேயே செயற்பட்டு வருகின்றனர்.

> வடக்கும், கிழக்கும் இரண்டு மாகாண சபைகளாக இருக்கும் பட்சத்தில், கிழக்கு மாகாணம் நிச்சயமாக தமிழ் மக்கள் கையைவிட்டுச் சென்று, தொடர்ச்சியான சிங்களக் குடியேற்றம் மூலம் தமிழ் இனமே அங்கு அழிக்கப்பட்டுவிடும்.

இதனைவிட கடத்தல், கப்பம் வேண்டுதல் போன்ற பல செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றார்கள். கேட்டால், இவை யாவுமே தமது உயிர் வாழ்விற்கென்றும் (survival) கூறிக்கொள்கின்றார்கள்.

இராணுவத்தினருடன் நின்று செயற்பட்டு வருவதால் இவர்களும்கூட அரசாங்கத்தின் சதி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படலாம். அதாவது, இவர்களை வற்புறுத்தி தேர்தல் கேட்க வைப்பதன் மூலம், அரசாங்கம் தான் நினைத்த காரியத்தை நிறைவேற்ற முயற்சித்து வருகின்றது. (அரசாங்கத்துடன் நிற்பதால் இவர்களும் மறுக்க முடியாமல் தேர்தலுக்குப் போக நிர்ப்பந்திக்கப்படுவார்கள்).

இவை யாவும் தமிழ மக்களின் நியாயமான கோரிக்கைகளை மிகப பாரிய அளவில் பலவீனப்படுத்தும் என்பதை உணர்ந்து சகல இயக்கங்களும் விழிப்புடன் செயற்படாவிட்டால், எமது இனத்துக்குத் துரோகம் செய்தவராவோம்.

## கார்த்திகை 9 தோழர் வி.ஏ.கே நினைவு நாள்



தோழர் வி.ஏ.கந்தசாமி அவர்கள் இலங்கையின் சமூக அரசியல் மாற்றம் தொடர்பான 2௳ து காலகட்டத்தின் பிரதிநிதி. 50களின நடுப்பகுதியில் அரசியற்பிரவேசத்தை மேற்கொண்ட தோழர் வி.ஏ.கே அவாகள் ஆரம்பத்தில் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலும், பின்னர் சீனச சார்பு கம்யூனிஸ்ட் கட்சியிலும் செயறபட்டார்.

60களின் நடுப்பகுதியில், வட கிழக்குப பகுதியில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டங்களில் அவர் முனனணியில் நின்றார். தேனீர்க்கடை மறியல் போராட்டம், கோயில் பிரவேசம் போன்ற போராட்டங்கயில் அவரின் முத்திரை பதிக்கப்பட்டது. உள்ளூர் நிலவுடமையாளர்களும் பொலிசும் அடக்கு முறைகளை கட்டவிழ்த்து விட்டபோது இவர் பல தடவை கைதுசெய்யப்பட்டு பொலிஸ நிலையங்களில் தடுத்து வைக்கப்பட்டார்.

1971 இல் ஜே.வி.பி கிளர்ச்சிக் காலத்தின்போது இவர் தனது தோழர்களுடன் சிறையிலிருந்தார். 70களின் நடுப்பகுதியில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை பற்றிய கருத்துக்கள் வலுவடைந்தபோது அதில் அவர் தீவிர கவனம் செலுத்தினார்.

1980களின் முற்பகுதியில் ஈழ விடுதலைப் போராட்ட அரங்கில் புதிய சிந்தனைகள் உருவாகின. வட கிழக்கில் தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள், பெண்களை, புத்தி ஜீவிகளை ஒரு சமூகமாற்றம் தொடர்பாக அணிதிரட்ட வேண்டும் என்ற கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. தீவிரத்துடன் செயற்படும் இவ் இளம் சக்திகள் பற்றி அவர் அதிகம் ஆர்வம் கொண்டார்.

இந்த ஈடுபாடுதான் அவரை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின்பால் ஈர்த்தது. இனவாதமற்ற, பரந்த கண்ணோட்டம் உள்ள சக்திகளை ஊக்குவிக்க வேண்டும், அவர்களுடன் சேர்ந்து தன்னாலான பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தார்.

இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்ட தன் பின்னர் விவசாயிகளையும் மக்கள் குழுக்களையும் தானே முன்னின்று கட்டியமைத்தார். தோழர்களுடன் அரசியல் கலந்துரையாடல்களை நடாத்தினார். ஈழத் தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவராக இருந்த தோழர் வி.ஏ.கே தனது முதுமையிலும இளைஞனைப் போன்று சுறுசுறுப்புடன் கடமையாற்றினார்.

தனது 70 வது வயதில் மரணத்தை தழுவும் வரையிலும் அலருக்கென்று ஒரு வதிவிடம் இருக்கவில்லை. திருமணம் செய்துகொள்ளாத தோழர் அவர்கள், தோழர்களை தனது உற்ற சுற்றமாகக் கருதி வாழ்ந்தார். தனது மரணத்தை தழுவுவதற்கு ஒரு சில மணி நேரத்திற்கு முன் அகதிகள் முகாமிலிருந்த தோழர்களுடன் அரசியல் கலந்துரையாடல்களை நடாத்தினார்.

ஒரு சில வருடங்களுக்குள்ளேயே பொறுப்புணர்ச்சியில் சலிப்படைந்து விடும் மனிதர்கள் அதிகரித்துள்ள காலகட்டத்தில் ஏறத்தாழ 35 வருடங்களுக்கு மேலாக சமூகத்திற்காக வாழ்ந்தவர் வரலாற்றின் கணிப்பிற்குரிய மனிதர் தான், அந்த வகையில் தோழர் வி.ஏ.கே எமக்கெல்லாம் உதாரண புருசர். அன்னாரது நினைவு நாளில், அவருடைய கனவுகளை மனதிலிருத்திச் செயற்படுவதே நாம் அவருக்குச் செய்யும் உண்மையான அஞ்சலியாகும்.

படிப்பகம்

# எமது கட்சியும் மக்களும்

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் (05-09 மாசி 1993) நிறைவேற்றிய அரசியல் திட்ட அறிக்கையிலிருந்து....

1. ஈழத்து மக்கள் மிகவும் நெருக்கடிகளுக்குள்ளும், குழப்பமான அரசியல் சூழல்களுக்குள்ளும் அகப்பட்டிருக்கும் காலகட்டத்தில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் இரண்டாவது காங்கிரஸ் கூட்டப்பட்டிருக்கிறது. பரந்துபட்ட ஈழமக்கள் மட்டுமல்ல, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும்கூட, சூறாவளி அரசியல் சூழல்களும் சிக்கல்களும் நிறைந்த இந்த காலகட்டத்தில் மிகவும் பொறுமையான நிதானத்துடனும் கவனத்துடனும் செயற்படவேண்டியுள்ளது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கடந்த சில ஆண்டுகளாக, தான் எதிர்நோக்கிய அனைத்து நெருக்கடிகள் மத்தியிலும் கட்டுக் குலையாது–கட்டுப்பாடு குலையாது செயற்பட்டு வருவதை எமது எதிரிகள் தாங்கிக் கொள்ள முடியாமல், நேரடியாகவும் மறைமுகமாகவும் வெட்கங்கெட்ட கூட்டுகளைச் சேர்த்துக் கொள்ளவும் தயங்காமல், எமக்கெதிராகச் செயற்படுவதில் மிக முனைப்பாக இருந்து வருகிறார்கள். நிலைமைகள் எவ்வாறாக இருந்த வேளைகளிலும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது இலட்சியப் பாதையில் சிறிதளவேனும் தடம் புரளாது, தனது நண்பர்கள் யார் எதிரிகள் யார் என்பதைப் புரிந்து கொண்டு மிகத் தெளிவோடும் உறுதி குலையாமலும் செயற்பட்டு வந்திருக்கிறது என்பதில் நாம் அனைவரும் நெஞ்சை நிமிர்த்திப் பெருமைப்பட முடியும்.

2. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது தனது பத்தாண்டுகளுக்கும் மேலான வரலாற்றை மிகப் பெருமையோடு கடந்து வந்திருக்கிறது; பல தோல்விகளையும் சோதனைகளையும் சந்தித்து வந்திருக்கிறது. தனது சொந்த நலன்களை ஈழ தேசத்தினதும், ஈழ மக்களினதும் நலன்களுக்குள் உட்படுத்தியே செயற்பட்டு வந்திருக்கிறது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பேரம் பேசும் அரசியலிலோ, மக்களினதும் சொந்த தேசத்தினதும் நலன்களை விலைபேசும் அரசியலிலோ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது ஈடுபட்டதில்லை. ஈழமக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளுக்கெதிராகவோ அல்லது அவர்களின் சமாதான வேட்கைகளுக்கு எதிராகவோ அல்லது மக்களின் அடிப்படை அபிலாஷைகளுக்கு விரோதமாகவோ ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி எந்தச் சந்தர்ப்பத்திலும் செயற்பட்டதில்லை என்பதைப் பெருமையோடு கூறிக் கொள்ள முடியும்.

3. ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியானது திட்டவட்டமான இலட்சியக் குறிக்கோள்களுடனும், அரசியல் நிலைப்பாடுகளுடனும், ஒளிவுமறைவின்றி நேரிய பார்வையுடனும், நேர்மைத் திறனுடனும் இதுகாலவரை எவ்வளவோ நெருக்கடிகளின் மத்தியிலும் தடம் புரளாது செயற்பட்டு வந்திருக்கின்றது. சுதந்திர ஈழத்துக்கான போராட்டத்தை முன்னெடுப்பதிலும் சரி, ஈழத்து அரசியலில் அகமும் புறமும் பெரும் மாற்றங்கள் ஏற்பட்ட வேளையிலும் போராட்டத்தின் அடிப்படை விடயங்கள் சிதைந்து விடாமலும் திசை திருப்பப்படாமலும் பாதுகாக்கும் வகையில் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் விடயத்திலும் சரி, ஈழத்து மக்களின் சர்வதேச மற்றும் உள்நாட்டு நண்பர்களை இழந்துவிடாமல் பராமரிக்கும் விவகாரங்களிலும் சரி, நாம் அளப்பரிய தியாகங்களைச் செய்து மிகவும் துணிச்சலான முறைகளில் செயற்பட்டு வந்திருக்கிறோம் என்பதை வரலாற்றில் யாரும் மறைத்துவிட முடியாது.

4. 1981ம் ஆண்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி தனது ஆரம்ப மாநாட்டை நடத்தியபோது, இன்றுள்ள நிலைமையைப் போலல்லாது, ஈழப் போராட்டத்தில் ஆரோக்கியமானவையாகவும் உற்சாகமூட்டுபவையாகவும் நிலைமைகள் இருந்தன. 1960களின் பிற்பகுதியைப் போலவே 70களின் மிகப் பிற்பகுதிகளிலும் தமிழ் நாடாளுமன்றப் பிரமுகர்களின் தலைமையின்மீது தமிழ் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போன போதிலும், இவ்வேளையில் அரசுக்கு எதிராக நடைபெற்றுக் கொண்டிருந்த ஈழத் தமிழ் மக்களின் போராட்டத்தின் மீதான நம்பிக்கையில் தளர்ச்சி ஏற்படவில்லை.

காரணம், 1960களின் பிற்பகுதியைப் போலல்லாமல், இவ்வேளை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருந்த மாற்று அரசியல் நிலைமைகள் – அதாவது, தமிழ் இளைஞர்களின் தீவிரமான அரசியல் ஈடுபாடுகளும், நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்குத் தொடர்ச்சியான ஆர்வத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி வந்தன.

1977ம் ஆண்டு நாடாளுமன்றப் பொதுத் தேர்தலின்போது, தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தமது தேர்தல் வெற்றிவாய்ப்பு நோக்கங்களுடன் தனித் தமிழ் ஈழம் என்ற சுலோகத்தை முன்வைத்தனர். எனினும் அது தமிழ் மக்களின் மனங்களில் ஒரு திடமான கருத்தாகப் பற்றிக் கொண்டது.

1977ம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.ஆர்.ஜெயவர்தனா தலைமையில் மிகப் பெரும்பான்மையான ஸ்தானங்களுடன் சிறிலங்காவில் ஆட்சிக்கு வந்த நாட்தொடக்கம் இலங்கையின் பல்வேறு பாகங்களிலும் தமிழ் மக்களுக்கெதிராக சிங்கள இனவெறிப் படுகொலைகள் கட்டவிழ்த்து விடப்படுவது வழமையாகிவிட்டது.

ஆனால், இது கண்டு தமிழ் மக்கள் அச்சம் கொள்ளவில்லை. மாறாக, ஆத்திரமும் மன உறுதியுமே கொண்டனர். அரசுக்கு எதிராகப் போராடிய அனைத்துக் குழுக்களையும் மனப்பூர்வமாக ஆதரித்தனர்.

தமிழ் மக்களின் போராட்ட உணர்வுகளையும், அவற்றின் வெளிப்பாடுகளையும் அடக்கி ஒடுக்குவதற்காக சிறீலங்கா அரசு இராணுவ ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும், விசேட ஒடுக்குமுறைச் சட்டங்களையும் தீவிரமாக நடைமுறைப்படுத்தியது. ஆனாலும், அரசின் இந்நடவடிக்கைகள் ஈழமக்களின் போராட்டத்தில் உத்வேகத்தையும், அளவு ரீதியான வளர்ச்சியையும் ஏற்படுத்தினவே தவிர, போராட்டத்தினை சிதறடித்துவிடவோ அல்லது அடக்கிவிடவோ முடியவில்லை.

ஈழமக்களின் போராட்டத்தின் வரலாற்று ஓட்டத்தில் நிலவிய இந்த ஆரோக்கியமான காலகட்டத்தில்தான், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உத்தியோகபூர்வமாக ஸ்தாபன வடிவம் பெற்றது.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியை ஆரம்பித்து தலைமை தாங்கிய, வழிநடாத்திய செயலாளர் நாயகம் தோழர் க.பத்மநாபா உட்பட பல தோழர்கள் ஈழப் போராட்டத்தில் ஏற்கனவே பல ஆண்டுகளாக ஈடுபாடுகளையும் அனுபவங்களையும் கொண்டிருந்தனர்.

போராட்ட வரலாற்றில் அதுவரை பெற்றுக்கொண்ட அனுபவங்களையும், மக்களிடமிருந்து கற்றுக்கொண்ட பாடங்களையும் அடிப்படையாகக் கொண்டே தோழர்கள் கட்சியின் அரசியல் திட்டத்தை உருவாக்கினர். கட்சியைக் கட்டியெழுப்பும் வேலைத் திட்டங்களை மேற்கொண்டனர்.

(வரும்)




தோழர் பத்மநாபா அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணித் தோழர்கள் மட்டக்களப்பு, வாழைச்சேனை, ஏறாவூர், செங்கலடி, பட்டிருப்பு ஆகிய இடங்களில் மரம் நடுகை இயக்கத்தை நடத்தினர்.

சென்னையில் தேவநேயப் பாவாணர் நூலக அரங்கில் நினைவுதினக் கூட்டம் நடைபெற்றது. தா.பாண்டியன் (ஐக்கிய பொதுவுடமைக் கட்சி), மகேந்திரன் (இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி), ஜெயகாந்தன் (எழுத்தாளர்), செந்தில்நாதன் (முற்போக்கு எழுத்தாளர் சங்கம்), வளவன் (ஈ.பி.ஆர்.எல்.எவ்) ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

## இனச் சிறுபான்மையினரின் உரிமைகளும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களும்.

ஜனநாயகத்தை மீள்விக்கும் போராட்டம் இனப் பிரச்சினைக்கான தீர்வையும் உள்ளடக்கியது. சார்பற்ற, பன்முகத் தன்மை வாய்ந்த அரசியல் முறையை நோக்கி முன்னேறிச் செல்வதை பிரதான நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். அதனுடைய வளர்ச்சிப் போக்கில் அரசியலமைப்பு சீர்திருத்தங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

இன்றைய தேவை அரசியலமைப்பைச் சீர்திருத்துவதும், தமிழ் பேசும் மக்கள் தொடர்பான சட்ட ரீதியான குறைபாடுகளை நிவர்த்திப்பதாகவும் இருக்க வேண்டும்.

சீர்திருத்தங்களுக்கான அடிப்படை விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

1. இலங்கை பல்லின மக்கள் வாழும் நாடாக பிரகடனப்படுத்தப்படவேண்டும்.

2. இலங்கையில் மாவட்டங்களாக இருக்கும் பிரதேச முறைமையை நிராகரித்து மாகாணங்களாக மீள் ஒழுங்கு செய்யப்பட வேண்டும்.

3. இலங்கை மதச்சார்பற்ற நாடாக பிரகடனம் செய்யப்பட வேண்டும்.

4. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை நீக்கப்பட வேண்டும்.

5. நாட்டின் ஜனாதிபதியாக இருப்பவர் நேரடியாக மக்கள் மூலம் தெரிவு செய்யப்பட்ட அமைப்புகளூடாக தேர்ந்தெடுக்கப்படவேண்டும். நாட்டின் இறைமையைப் பேணுவதற்கு உதவி ஜனாதிபதி முறைமை கொண்டுவரப்பட வேண்டும். அவர் ஜனாதிபதி சார்ந்த இனத்தைச் சேர்ந்தவராக இருக்கக்கூடாது.

நாட்டின் தேசிய சிறுபான்மையினரின் நலனைப் பிரதிபலிப்பதாகவும், பிரதிநிதித்துவப்படுத்துவதாகவும் இது இருக்க வேண்டும்.

நாம் பிரதானமாக முக்கியத்துவப் படுத்தும் விடயம் மாகாண சுயாட்சி. கூட்டாட்சி அரசியலமைப்பினுள், ஒரு சமஷ்டி அரசியலமைப்பு சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் ஒரு மேம்பட்ட சமத்துவமான தீர்வாக இருக்கும்.

அதேவேளை 13வது திருத்தச் சட்ட மூலத்தின் கீழ் அதிகாரப் பரவலுக்கான அனைத்து முயற்சிகளும் மேற்

(தொடர்ச்சி 3ம் பக்கம்)

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com



# “அரசும், புலிகளும் மக்களை மேலும் மேலும் அவல நிலைக்குத் தள்ளுவதிலேயே முனைப்பாயிருக்கிறார்கள்”

## ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் அரசியல் பீட உறுப்பினர் தோழர் தி.சிறீதரன்

கடந்த 15 வருட காலத்தில் நிலவாத மிகமோசமான யுத்த நெருக்கடி இன்று நிலவுகிறது. நாகதேவன்துறை, பூநகரிப் பகுதியில் நடைபெற்ற தாக்குதல்கள், உயிரிழப்புக்கள் என்பன இங்கு தொடர்ந்து யுத்தம் நடாத்த முடியுமா என்ற பலமான கேள்வியை எழுப்பியுள்ளன.

வருடாந்தம் யுத்தத்திற்கென 2000 கோடி ரூபாவுக்கு மேல் செலவிடும் அரசு, இன்னும் பல மடங்கு பணத்தை யுத்தத்தில் வாரியிறைத்து விரயம் செய்வதற்கான நிலைமைகள் தோன்றியுள்ளன. உயிர்ப்பலி, தாங்க முடியாத பொருளாதாரச் சுமை என்ற நிலைமைகளுக்குள்ளேயே மக்கள் தொடர்ந்து வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

இணைந்த வட கிழக்குப் பகுதியைத் துண்டாடி யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிவிட்டால் பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என்று அரசு எதிர்பார்க்கிறது. ஆனால் யுத்த நிலமைகள் மிகவும் சிக்கலாயுள்ளன. 13 பேரில் ஆரம்பித்தது இன்று 500, 1000 என அதிகரித்துள்ளது. புலிகள் தரப்பில் அதே அளவு இல்லாவிட்டாலும் 500 பேருக்கு மேல் கொல்லப்பட்டுள்ளனர்.

ஆனால் மூன்றாவது தரப்பினரான பொதுமக்கள் அச்சம், உணவுப் பஞ்சம், உயிர் அபாயம், வாழ்க்கை முடக்குப்பட்ட நிலை ஆகியவற்றுள் சிக்கித் தவிக்கிறார்கள். இவர்களைப்பற்றி அரசோ புலிகளோ அலட்டிக் கொள்வதாக இல்லை. இருதரப்பாருமே மக்களின் போக்குவரத்துக்குத் தடை விதித்துள்ளார்கள்.

ஆனால் இந்திய அமைதிகாப்புப் படையை திருப்பி அனுப்பியது தவறு என்பதுபோல் ஆட்சியாளர்களிடம் ஞானோதயம் உருவாகியிருப்பதாக தெரிகிறது. புலிகளுடன் அண்ணன் தம்பி உறவு கொண்டாடி இந்திய அமைதி காப்புப் படையை திருப்பி அனுப்பியவர்கள், இன்று இந்தியப் படையின் தேவையை உணர்ந்திருப்பது ஒன்றும் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக அல்ல. அப்பட்டமான யுத்த தேவைக்காகவே.

ஆள்பவர்கள் அல்லது ஆதிக்க சக்திகள் தமது சொந்த நலன்களைப் பேணுவதற்காக எதையும் செய்யச் சித்தமாக இருக்கிறார்கள். ஆனால் நாட்டில் நிலவும் உண்மையான பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும். மக்கள் படும் துன்பங்களிலிருந்து விடுதலை வேண்டும். ஜனநாயக, மனித உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதுபற்றி அவர்களுக்கு அக்கறை கிடையாது.

நர்டடின் பிரதான பிரச்சினையான இனப்பிரச்சினையைக் கையாளும் பொறுப்பை படையினரிடம் விடுவதென்பது முற்று முழுதாக சிவில் அமைப்புக்கள், ஏன் சிவில் அரசாங்கம் என்பதைக் கூட இல்லாதொழித்துவிடும் என்பதை பெரும்பான்மையினத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் உணர்வதாக இல்லை.

அவர்களைப் பொறுத்தவரை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது ஈழம் கொடுப்பதற்குச் சரி என்றாகிவிடுகிறது. எனவே இனப்பிரச்சினை தீர்வு பற்றிய கருத்துக்கள் வலுவடையும் போது பிரச்சினையை வேறுபக்கம் திருப்புகிறார்கள்.

இவர்களின் இத்தகைய போக்குகள் தென்னிலங்கையில் மீண்டும் இன வன்முறையை ஏற்படுத்துவதற்கான முஸ்தீபுகளாகவே அமைகின்றன. அங்கு “எமது பையன்கள்” கொல்லப்படுகிறார்கள். இங்கு தமிழர்கள் சுதந்திரமாக வாழ்கிறார்கள் என்பதுபோல் பிரச்சாரங்கள் முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. யாரும் கொல்லப்படுவது பற்றி யாருக்கும் உடன்பாடில்லை. ஆனால் தமிழர்கள் யார்? அவர்களின் ஸ்தானம் என்ன? என்ற கேள்விகள் தொக்கி நிற்கின்றன.

பல இன மக்கள் வாழும் நாடான இலங்கையில் அவர்கள் பிறராகக் கருதப்படும் நிலை நிலவுகிறது. இது பற்றிய கருத்துரு அவர்களின் மனங்களில் ஆழமாகப் பதிந்துவிடுகிறது. அவர்கள் இங்கு சிங்கள மக்களைப் போல அனைத்து உரிமைகளையும் பெற்று வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்பது நிலைநாட்டப்பட வேண்டும்.

ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுமில்லை, தமிழர்கள் அடக்கி ஒடுக்கப்பட்ட இனமாகத்தான் வாழவேண்டும் என்ற எதிர்பர்ாப்பை சுயமரியாதை, கௌரவம் உள்ள மனிதன் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளமாட்டான்.

## குறிஞ்சிச் சாரல்...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மலையக மக்களின் பிரஜாவுரிமை தொடர்பான, அரசியலமைப்புச் சட்டத்தில் உள்ள பாதகமான அம்சங்களும், மலையக மக்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும் வகையிலுள்ள ஒப்பந்தங்கள் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டு, நாடற்றோர் என்ற நிலைமை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

தோட்டங்கள் தோறும் பெயரளவில் காணப்படும் பாடசாலைகள் நவீனமயப்படுத்தப்பட வெண்டும். ஏற்கனவே இப் பிரதேச பாடசாலைகளுக்கென U.N.I.C.E.F போன்ற நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட உதவிகள் இங்கு சென்றடையவில்லை. இதற்கு என்ன நடந்தது என்பது பெரும் கேள்விக்குறியாகவே உள்ளது.

பல இனங்கள் வாழும் நாடு என்ற வகையில் மலையக மக்கள், தங்கள் கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை வளர்ப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எல்லாவற்றுக்கும் மேலாக இம் மக்கள் வாழும் குடியிருப்புக்களும், அதைச் சுற்றியுள்ள வீட்டுத் தோட்டங்களும் அவர்களுக்கே சொந்தமாக்கப்பட வேண்டும்.

இதற்காக அனைத்து மலையக மக்கள் நலன் தொடர்பான சக்திகள் ஐக்கியப்பட வேண்டும். 150வருடகாலமாக இலங்கையின் வருமானத்தில் 60 வீதத்தை ஈட்டித் தந்த இம் மக்களின் அடிப்படை உரிமைகள் எதுவும் அற்றவர்களாக வாழ்வது மனித நாகரீகத்திற்கு புறம்பான விடயமாகும். எனவே மனிதர்களாக வாழ்பவர்கள் இது விடயத்தில் அக்கறை செலுத்த வேண்டும்,

## நெசாயேவிசம்

19ம் நூற்றாண்டு ரஷ்யாவின் புரட்சி மரபில் தோன்றிய ஒரு அதிதீவிரவாதப் போக்கு. அந்தப் போக்கின் மூலகர்த்தா ஸெர்ஜி நெசாயேவ். ஒரு நல்ல குறிக்கோளை எய்துவதற்காக எந்த வழிமுறைகளையும் பயன்படுத்தலாம் என்பதுதான் நெசாயேவின் கொள்கை. பொய் சொல்லுதல், புரட்சியாளர்களை ஏமாற்றுதல், தோழர்களைக் கொலை செய்தல், மக்களை மோசடி செய்தல், கருத்து வேறுபாடு கொள்பவர்கள்பற்றிய அவதூறுகள் பரப்புதல் ஆகியவை புரட்சியை சாதிக்க உதவுமானால் அவற்றைப் பயன்படுத்தியே தீரவேண்டும் என்பது அவனது கோட்பாடு.

‘பொதுமக்கள் தீர்ப்பு’ என்ற பெயரில் தலைமைக் குழுவொன்றால் வழி நடத்தப்படும் ஐந்தைந்து பேர் கொண்ட சிறுசிறு புரட்சிக் குழுக்களை உருவாக்கி, புரட்சி மந்திரங்கள் சிலவற்றைக் குழு உறுப்பினர்களுக்குக் கற்றுக் கொடுத்து புரட்சியை நடத்தத் திட்டமிட்டவன் அவன். அந்தத் தலைமைக் குழுவில் இருந்தது அவன் மட்டுமே.

தன்னை ஒரு பெரும் புரட்சியாளன் என்று மற்றவர்கள் - குறிப்பாகத் தனது அமைப்பைச் சேர்ந்தவர்கள் - நம்பவேண்டும் என்பதற்காகப் பல பொய்களைக் கூசாது சொன்னவன் அவன்.... மூன்று அடுக்குகள் கொண்ட தனது அமைப்பில், இரண்டாவது, மூன்றாவது அடுக்குகளில் உள்ள உறுப்பினர்கள் முதல் அடுக்கைச் சேர்ந்தவர்களுக்கு வாய் பேசாது அடிபணிய வேண்டும் என்றும், எல்லா விஷயங்களையும் அவர்கள் ஒளிவு மறைவில்லாமல் தெரிவிக்க வேண்டும் என்றும் நியதி விடுத்த அவன், இந்தக் கீழ்மட்ட உறுப்பினர்களுக்கு மேல்மட்ட உறுப்பினர்கள் எல்லா விஷயங்களையும் சொல்ல வேண்டியதில்லை என்று விதி செய்தான்.

(நெசாயேவை முன்மாதிரியாகக் கொண்டு படைக்கப்பட்ட தோஸ்தோவ்ஸ்கியின் ‘பேய் பிடித்தவர்கள்’ நாவலின் கதாநாயகன் பியோதர் வெர்கோவென்ஸ்கி ஓரிடத்தில் கூறுகிறான்: “பயங்கரமான அளவுக்கு சக்தி வாய்ந்தது சீருடை. அந்தஸ்துகள், கடமைகள் ஆகியவற்றை நான் திட்டமிட்டே உருவாக்குகிறேன். செயலாளர்கள், தலைவர்கள், பதிவதிகாரிகள் எல்லாருமே என்னிடம் உள்ளனர். எல்லாருக்குமே சீருடை பிடித்திருக்கிறது. அது ஒரு அற்புதமான வெற்றியைச் சாதித்துள்ளது”)

‘நம்மோடு ஒத்துப் போகாதவர்கள் அனைவரும் நமது எதிரிகள்’ என்ற முழக்கத்தை வைத்த நெசாயேவ், தனது நடவடிக்கைகளை விமர்சித்த இயக்கத் தோழன் ஐவான் ஐவானோவ் என்பவனை சதி செய்து ஒழித்துக் கட்டினான்.

இத்தகைய மனிதனிடம் மற்றொரு பண்பும் இருந்தது: எவ்வித உலகியல் ஆசைகளும் தன்னலமும் இன்றி இலட்சியத்திற்காக எல்லாத் தியாகங்களையும் செய்யும் நெஞ்சுறுதி, கைது செய்யப்பட்டு கை கால் விலங்குகள் பூட்டப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த காலத்தில் அவன் காட்டிய நெஞ்சுரம் ஜார் அரசாங்க அதிகாரிகளைத் திகைக்க வைத்தது....

நெசாயேவையும், நெசாயேவிசத்தையும் மார்க்ஸ், ஏங்கெல்ஸ் மட்டுமல்ல பகூனின் போன்றோரும் வன்மையாகக் கண்டித்தனர். ரஷ்ய சமூக-ஜனநாயகவாதிகள் அப்போக்கை முற்றிலுமாக நிராகரித்தனர். ஆயினும் ஏதோ ஒரு வடிவத்தில் நெசாயேவிசம் தொடர்ந்து நிலவியது என்றே கூறவேண்டும்.

-நன்றி: கல்குதிரை-8.

## காலந்தோறும் பெண்மை

மருட்சி-பயம்... என் விழிகளில் பயம் இருப்பதா அழகு? நான் எதற்கு அஞ்ச வேண்டும்? யாருக்கு அஞ்ச வேண்டும் - என்று இவள் நினைக்கவேயில்லை.

ஏனெனில், இவளுடைய உடற்கூறியலே இவளுக்கு அஞ்சுவதற்கு ஒரு காரணியாகக் கற்பிக்கப்பட்டிருக்கிறது. எவரும் வலிய வந்து, ‘உன்னை’ பலாத்காரம் செய்துவிட முடியும். பிறகு நீ ஒன்றுக்கும் உதவாத குப்பையாவாய்! என்ற ஓர் அச்சத்தை, பெண் பூப்படைந்த நாளிலிருந்து, பெற்றோரும் மற்றோரும், உற்றவரும் ஊராரும் அவளுக்கு ஏற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த அச்சமே அவளுடைய பொருளாதார சுயச்சார்பை உறிஞ்சுகிறது; அவளுடைய கல்வியைப் பயனில்லாததாக ஆக்குகிறது; அவளுடைய திறமைகளை குடத்துக்குள் வைத்து மூடிவிடுகிறது....

பெண்ணின் கல்வியும், தொழிற்களமும், அரசியல் அரங்கும் அவளை இன்னமும் ஆண் ஆதிக்கம் செலுத்தும் குடும்ப வட்டத்துக்குத்தான் உரியவள் என்ற ஆதாரமான அழுத்தத்திலிருந்து விடுவித்திருக்கவில்லை.

சுதந்திரமாக இருக்க முடியாது - கற்புக்குப் பாதுகாவல் இல்லை.

எந்தச் சமூகவட்ட அங்கீகாரமும் - குடும்ப அடிப்படையிலேயே கிடைக்கும்.

குடும்பம் ஓர் ஆண் மகனின் மேலான தலைமையில்தான் இயங்கும்.

எனவே, இவள் உடல், உயிர், திறமை எல்லாவற்றுடனும் அவனுக்கு அடங்கித் தன்னைப் பூச்சியமாக்கிக் கொள்ளும்போது மேன்மை பெறுகிறாள். சுயசிந்தனை கருத்து ஊக்கப்படாமல் அமுக்கப்படும்.

இந்தத் தத்துவத்தையே நாள்தோறும் நாள்தோறும் கல்வி கற்ற பெண்களும்,பேராசிரியர்களும்,முதிய அனுபவசாலிகளும் இளந்தலைமுறைப் பெண்களுக்கு ஏதோ ஒரு வகையில் உணர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

படித்தாலும், சமூக-உலகியல் யதார்த்தங்களின் முரண்பாடுகள் உறுத்தாத குழந்தைகளாகவே ‘செல்விகள்’ முதிர்ச்சி பெறுகிறார்கள்....

“பையன் ஒழுக்கமே சரியில்லை. குடிக்கிறான், சூதாடுறான்...” என்றால், “ஒரு கால்கட்டைப் போட்டுடுங்க, தன்னால சரியாயிடுவான்” என்று வரப்போகும் பெண்ணின் தோள்களில் இவனைத் திருத்தும் சுமையையும் இந்தச் சமூதாய நீதி ஏற்றிவைக்கிறது.

இவள் பொருளாதார உற்பத்தியை ஏற்று, வரதட்சணைக்கும் தலைகுனிந்து, சமையல், வீட்டு நிர்வாகம், குழந்தைகளை வளர்த்தல் என்ற பொறுப்போடு, கணவனை நல்வழிப் படுத்தவும் தன் நலங்கள் அனைத்தையும் தியாகம் செய்கிறாள். இவற்றுள் ஏதேனும் ஒன்றிலிருந்து இவள் சிலும்பினாலும், மொத்த ஓவியமும் பாழாகிவிடுகிறது.

- ராஜம் கிருஷ்ணன்

படிப்பகம்

www.padippakam.com



# உளறுவாயன்



## உளறுவாயனின் தர்ம நியாயங்கள் யாருக்கு இங்கே புரியப் போகிறது?

"மௌனமாயிருப்பது மிகவும் நல்லது. மௌனத்தின் சிறப்பைப் பற்றி என்னால் மணிக்கணக்கில் பேச முடியும்."
– யாரோ.

பூநகரி அடியிலையும் இளம் பொடியள் கொஞ்சம் அநியாயமாய்ச் செத்துப் போச்சு. இன்னுங் கொஞ்சம் பொடியளுக்குக் கால் கை முடமாகிப் போச்சு. எந்த மொழி பேசுற பொடியளாயிருந்தாலும் சரி, அநியாயத்துக்குச் செத்து விழுந்து கொண்டிருக்குதுகள். ஏனெண்டுகேட்டு நிப்பாட்ட எந்த நாதியுமில்லை. அதமத்துக்குச் சண்டை நடத்திக் கொண்டிருக்கிறவையைக் கூண்டிலை ஏத்தி விசாரிக்கிற வழக்கை மக்கள் எப்ப போடப் போகினம்?

ரண்டு பக்கத்திலையும் இளஞ் சமுதாயம் பொதுவான மனுச வாழ்க்கைத் தாற்பரியங்களை அறியாததுகளாயே வளர்ந்து வருகுதுகள். புலியள் ஒரு பக்கம் அரசாங்கம் ஒரு பக்கம் கசாப்புக் கடை நடத்தவெண்டு கடவுளாலை அனுப்பப்பட்டு, என்னமோ விதி மாறிப்போய் இந்த நாட்டுச் சனத்தின்ரை கதியைத் தீர்மானிக்கிற ஆக்களாய் ஆகியிருக்கினம் போலை.

ஒரு பக்கம் வேள்விக்கு நேர்ந்து விட்ட ஆடுகள் போலை ஆக்கி, மாவீரருக்காகவே அனைத்தும் எண்ட கோஷமும், குடாநாடு முழுக்க வடிவான டிசைன்களிலை வரிசை வரிசையாய்ச் சமாதிகளுமாய், இளம் பொடியள் வாழ்வை விளங்கிக் கொள்ளுறதுக்கு முந்தி அதுகளுக்குச் சயனைட்டைக் கொழுவித் தற்கொலைச் சண்டைக்கு அனுப்பிக் கொண்டிருக்கினம்.

மற்றப்பக்கம், அஞ்சாம் வகுப்பு முடிச்ச உடனை பொடிப்பிள்ளை படிப்புக் காணுமெண்டு சொல்லுற மாதிரி நிலைமை. ஆமிக்குச் சேருற படிப்புப் படிச்சாச்சு. இனியென்ன, எம்பிமார் மந்திரிமார் எல்லாம் சம்ளத்தை விட்டுத் தாற அளவுக்குத் தூக்கிப் பிடிக்கிற உத்தியோகம். வியாபார வரி வேறை. சண்டையிலை செத்துப் போனாலும் தெருவெல்லாம் தோரணம் கட்டி தேசப் புதல்வர்களுக்கு பிரித்தோதிக் கொண்டாடுவினம் எண்டெல்லாம் இருக்கேக்கை பிறகென்ன, மண்ணின்மைந்தர்களாய் மாள வேண்டியதுதான்.

சிக்கல்கள் வளர வளர சிந்திக்கும் திறனும் வளருமெண்டெல்லே சொல்லுகினம். இஞ்சை என்னெண்டால், பத்தாம் வகுப்பு எட்டாம் வகுப்பு எண்டு படிப்படியாய்க் குறைஞ்சு அஞ்சாம் வகுப்புப் போதுமெண்டு வந்து நிக்குது. தங்கடை படையையும் புலிப்படைக்குச் சமப்படுத்திவிட்டால் வெல்லலாமெண்டு பாக்கினம் போலை.

இஞ்சை கொழும்பிலை இவையின்ரை அறிவுக்கு எட்டுற மாதிரிக் காரணங்கள் சொல்லித்தான் தமிழாக்கள் தப்பவும் வேணும். அவை பாத்து, இது அடையாள அட்டை இல்லையெண்டால், இல்லைத்தான்.

இதுக்குத் தோதாய்த்தான் ஊரிலை இருக்கிற எங்கடை பொடியளையும் இண்டைக்கு ஆக்கிவிட்டிருக்கினம். கிட்டடியிலை ஊரிலையிருந்து வந்த ஒரு பெரியவர் சொன்ன கதை இது. ரண்டு சிறிசுகள் கொடிக்கம்பம் ஒண்டைச் செங்குத்தாய் நிக்கவைச்சுப் போட்டு கஷ்டப்பட்டு ஏறி உயரத்தை அளந்துகொண்டிருந்தினமாம். பெரியவர் பாத்திட்டு, "தம்பியவை, தடியைக் கிடத்திப் போட்டுக் கஷ்டப்படாமல் அளக்கலாமெல்லே" எண்டு சொன்னாராம். மேலை ஏறி நிண்ட பொடிசு, ஒரு பார்வை பாத்திட்டுச் சொல்லிச்சுதாம், "பெரிசு! தலைவர் எங்களை நீளத்தை அளந்துவரச் சொல்லேல்லை, உயரத்தைத்தான் கேட்டிருக்கிறார் எண்டிட்டுத் தன்ரை வேலையிலை மும்முரமாகிச்சுதாம்.

பெரியவர் கவலைப்பட்டுக் கொண்டே போய்த் தலைவரைப் பாத்து விஷயத்தைச் சொன்னாராம். "இது எப்ப அவங்களுக்கு விளங்குதோ அப்ப, நான் தலைவனில்லை எண்டாராம் அவர். பகிடிபோலை தெரிஞ்சாலும், யோசிச்சுப் பாத்தால் நிலைமை கவலைக்குரியதுதான்.

இன்னுமொரு பகிடி. இதுவும் பெரியவர் சொன்னதுதான். யாழ்ப்பாணத்திலை இருக்கிற கவிஞர்மாரெல்லாம் அந்த எல்லாம் வல்ல தலைவருக்கு உலாப் பாடுறதிலைதான் முழுக் கெட்டித்தனத்தையும் காட்டுகினமாம். அதிலை ஒரு பாட்டு 'மக்கள் எல்லாம் பிரபாகரன் பக்கம்' எண்டு தொடங்குதாம். சுாணியயையும் ஈடுவைச்சு, புலியளுக்குப் பிணைக்குத் தேப்பனையும் விட்டிட்டு பாஸிலை தப்பி வெளியிலை வந்த தமிழ்ப் பொடி ஒண்டு மதவாச்சியிலை ஆமிக்காறனிட்டை மாட்டுப்பட்டுதாம்.

வழமைபோலை தமிழ் பேசுறவனெல்லாம் புலிதான் எண்ட ஆமித் தத்துவப்படி நல்ல மரியாதை குடுத்து விசாரிச்சிருக்கினம். பொடியன் இல்லையெண்டு குழற, 'உங்கடை தமிழ்ப் பாட்டைப் பாடுடா' எண்டிருக்கினம். இது, 'ஐயோ, நாங்கள் பாட்டெல்லாம் பாடுற மாதிரி நிலைமை இல்லை ஐயா' எண்டு அழுதுதாம். 'டே! அந்த மக்கள் எல்லாம் பாட்டைப் பாடுடா' எண்டானாம் ஆமிக்காறன். அப்பத்தான் பொடிக்கு என்ன கேக்கினமெண்டு ஓடிவெளிச்சுதாம். 'மக்கள் எல்லாம்....' எண்டு பாடத் துவங்கின பொடியன், அடுத்த பேரைக் கேட்டால் அடிக்கவெல்லோ போறாங்கள் எண்டு யோசிச்சுப்போட்டு, 'மக்கள் எல்லாம்... மக்கள் எல்லாம் மதவாச்சிப் பக்கம்' எண்டு பாடிமுடிச்சுதாம். சோகத்தையும்கூட பகிடியாய்ச் சொல்லலாம் எண்டதுதான் இது.

மட்டக்களப்பிலை ஒரே எலெக்சன் அல்லோலகல்லோலம்தானாம். படிச்சவை பெரியவை எண்டு ஆரும் வெட்டைக்கு இறங்கினால், "உங்களையும் எங்கடை லிஸ்டிலை போட்டிருக்கிறம் எண்டு கட்சிக்காரர் துரத்துகினமாம். பிரமுகர்மாரெல்லாம் கொழும்புக்கு ஓடிவந்துகொண்டிருக்கினமாம். இந்த எலெக்சனுக்குப் பின்னாலை இருக்கிற சதியை விளங்கிக்கொண்டிருக்கிற சனம், யு.என்.பி.யை வெல்லவிடக் கூடாது எண்டு அரசாங்கத்தோடை நிக்கிற கட்சிக்காரர் சொல்லுறதை நம்புதில்லையாம்.

இடையிலை ஒண்டு சொல்ல வேணும். இப்ப அரசாங்கத்தோடை நிக்கிற தமிழ்ப் பொடியளைப் பற்றி புலிக் கொந்துறாத்துக்காரர்கள் கொச்சையாய்ச் சொல்லித் திரியிறதிலையெல்லாம் எனக்கு உடன்பாடில்லை.

அவை அரசாங்கத்தோடை நிக்கிறதிலையும் எனக்கு உடன்பாடில்லைத்தான். ஆனால், புலியள் இதே யு.என்.பி. அரசாங்கத்தோடை குலாவிக் குழப்பியடிச்சுக்கொண்டிருக்கேக்கை மூச்சுக் காட்டாமல் தலையை மண்ணுக்குள்ளை புதைச்சுக் கொண்டிருந்தவையெல்லாம், வடக்குக் கிழக்கிலை நிக்கேலாதெண்டு புலியளாலை அடிச்சுத் துரத்தப்பட்ட ஆயிரக்கணக்கான தமிழ்ப் பொடியள் அரசாங்கத்தோடை போயிருக்கிறதிலைதான் அவையின்ரை ஆகடியங்களை விடுகினம். புலியள் காட்டிக்குடுத்த வழியைத்தான் இப்ப மற்ற சில தமிழ்க் கட்சியளும் பின்பற்றுகினம் எண்டதைத்தான் குற்றமாய்ச் சொல்லவேணும்.

இந்த நொட்டை சொல்லிக்கொண்டு திரியிற ஆக்களின்ரை நோக்கம், சிந்தனை என்னெண்டு எனக்குச் சிலசமயம் விளங்கிறேல்லை. தமிழ் மக்களின்ரை பிரச்சினையைத் தீர்க்க புலிப் படையும் சரியில்லை, இலங்கைப் படையும் சரியில்லை, வந்துபோன இந்தியப் படையும் சரியில்லை எண்ணுகினம் பின்னை என்னதான் சரிவரும் எண்டு இவை சொல்லுகினம் எண்டு கேட்டால் எதையோ வைச்சுக்கொண்டு ஒளிக்கினம் போலை கிடக்கு. கதையோடை கதையாய் சங்கரப்பிள்ளையரிட்டைச் சொன்னதுக்கு, அவையிட்டைச் 'சீனப் படை வந்தால் எப்பிடி' எண்டு கேட்டுப் பாரும் எண்டார் அவர்.

பிறகு சந்திக்கிறன், ஆளை விடுங்கோ.

---

எங்களது நம்பிக்கை எல்லாம், ஒரு சின்ன மெழுகுவர்த்தியின் வெளிச்சத்தை அணைக்கக் கூடிய அளவுக்கு இருள் இந்த உலகில் இல்லை என்பதுதான்.

– 'வெளிச்சம்' முதலாவது இதழ் பிரகடனத்தில்...

---

## தொடரும் வன்முறைகளுக்கு மாற்றீடாக...

(முன்பக்கத் தொடர்ச்சி)

இம்மாநாட்டின் முடிவில் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:

* மாநாட்டின் கட்டுரைகள், கலந்துரையாடல்களைத் தமிழ், சிங்கள, ஆங்கில மொழிகளில் பிரசுரித்து இலங்கையில் பரவலாக விநியோகிப்பது.

* இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை, பயங்கரவாதப் பிரச்சினைதான் உண்டு என்று கூறிவரும் சிறீலங்கா அரசின் நிலைப்பாட்டை அம்பலப்படுத்துவதுடன், இலங்கைக்கு நிதி உதவும் நாடுகள் மத்தியில் இலங்கை அரசின் மீது அழுத்தத்தைக் கொண்டுவரக் கோரும் பிரச்சாரத்தை மேற்கொள்ளல்.

* சிறீலங்கா அரசு தடுத்து வைத்திருக்கும் அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்கக் கோருவது.

* புலிகளின் வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அனைவரையும் உடன் விடுவிக்கக் கோருவது.

---

## கணக்கு வாத்தியார் கதை

செய்து காட்டப்பட்ட கணக்குகளை எல்லாம் அதுவும் பிழை இதுவும் பிழை என்று சொல்லிக் கொண்டிருந்தார் வாத்தியார். நீங்கள் கணக்குச் செய்த முறைகள் எல்லாமே பிழைதான் என்று கிண்டலும் எக்காளமுமாகப் பேசி வந்தார். எல்லாரையும் போலவே, தான் கணக்குச் செய்யும் முறை சரியானதுதான் என்று நம்பிக்கை கொண்டிருந்த ஒரு மாணவன் கேட்டான்: "எல்லாம் பிழையெண்டால் இதை எப்பிடிச் செய்யிறதெண்டு சொல்லித் தாருங்கோ அல்லது செய்து காட்டுங்கோ வாத்தியார்" என்று. அதுக்கு அந்த வாத்தியார் சொன்னார்: "என்ரை வேலை நீங்கள் கணக்குச் சரியாய்ச் செய்யிறீங்களோ பிழையாய்ச் செய்யிறீங்களோ எண்டு பாத்துச் சொல்லுறதுதான். செய்துகாட்டுறது எல்லாம் என்ரை வேலை இல்லை."

கேள்விகளை மட்டும் கேட்டுக் கொண்டிருக்கவும், பிழைகளைக் கண்டுபிடித்து நையாண்டி பண்ணவும் மட்டும் உரிமை கொண்டவரான வாத்தியாரிடம் போய்த் தன் சந்தேகத்தைக் கேட்டதற்காக மாணவனுக்கு இப்போது வெட்கமாகி விட்டது. ஆனாலும், ஒருத்தரும் சரியாய்ச் செய்கிறார்களில்லை என்று தெரிந்துவைத்திருக்கும் வாத்தியாருக்கு, அதைச் சரியாகச் செய்யும் முறையைச் சொல்லுவதில் என்ன சங்கடம் என்று அவனுக்கு விளங்கவில்லை. கணக்கைச் சரியாகச் செய்யும் முறையைத் தெரியாத வாத்தியார் எப்படிச் சரிபிழை திருத்துகிறார்? அவனுக்கு அதுவும் விளங்கவில்லை. சே! இந்த வாத்தியார்கள்தான் எத்தனை விதமாய் இருக்கிறார்கள் பாருங்கள்.

– வெ.விநாயகமூர்த்தி

படிப்பகம்

www.padippakam.com





# "அரசியல் சட்டங்களை மாற்றி இணைப்பாட்சி முறையை ஏற்படுத்தாதவரை எந்தத் தீர்வுத் திட்டமும் பயன்தரப் போவதில்லை"

## வரவு செலவுத் திட்ட விவாதத்தில் தோழர் சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழ் பேசும் மக்கள் மிகப் பெரும்பான்மையாக வாழ்ந்துவரும் வடக்குக் கிழக்கு மாகாணம் அவர்களது பாரம்பரிய பிரதேசமாகும். இதைப் புரிந்துகொண்டே அம் மக்களை அங்கு சிறுபான்மையாக்கும் முயற்சியில் அரசாங்கங்கள் ஈடுபட்டு வந்திருக்கின்றன. 60 ஆயிரத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் உயிரிழந்த பிறகும், சொந்த வாழ்விடங்களை இழந்து நாட்டின் உள்ளேயும் வெளியேயும் இலட்சக் கணக்கில் அகதிகளான பிறகும், தமிழர்களுக்கு இருள் சூழ்ந்த நரக வாழ்க்கையே நிரந்தரம் என்ற நிலையாகிய பிறகும், அரசுக்குத் தமிழர் பிரச்சினை என்ற ஒன்று நிலவுவதாகத் தெரியவில்லை. தமிழர் பிரச்சினையென்றோ, இனப் பிரச்சினை என்றோ வரும்பொழுது இவர்கள் தீக்கோழி போல் தலையை மறைக்க முனைகின்றார்கள்....

> தமிழர்கள் தொடர்பான அடிப்படையான சந்தேகங்களை நீங்கள் நீக்காதவரை– இலங்கை பல்லின மக்கள் வாழும், பல மொழிகள் பேசும், பல மதங்களைக் கொண்ட நாடு என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளாதவரை –பிரச்சினைகள் மேலும் மேலும் சிக்கலாகிக் கொண்டுதான் இருக்கும்.

இலங்கையின் இனப்பிரச்சினை என்பது உலகறிந்த விடயமாகிவிட்ட போது அதற்கு நியாயமான தீர்வு காணப்பட வேண்டுமென சர்வதேச மனித அமைப்புக்கள, பல்வேறு நாடுகள் என்பன கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கும் போது, இனப்பிரச்சினையைத் தீர்க்கவென சர்வகட்சி மகாநாடும், பாராளுமன்றத் தெரிவுக் குழுவும் இயங்கிவந்த பொழுதும், இந்நாட்டின் ஜனாதிபதிக்கு இனப்பிரச்சினை என்று ஒன்று இருப்பதன் மர்மம் தெரியாமல் போனதன் விநோதம் என்ன? தம் தலைகளில் சுமந்துள்ள பேரினவாத அழுக்குகளை நீக்காத வரையில் தமிழர் பிரச்சினை இவர்களுக்குப் பயங்கரவாதப் பிரச்சினையாகவே தெரியும்....

தமிழர்கள் தொடர்பான அடிப்படையான சந்தேகங்களை நீங்கள் நீக்காத வரை– இலங்கை பல்லின மக்கள் வாழும், பல மொழிகள் பேசும், பல மதங்களைக் கொண்ட நாடு என்ற யதார்த்தத்தை ஏற்றுக் கொள்ளாத வரை– பிரச்சினைகள் மேலும் மேலும் சிக்கலாகிக்கொண்டுதான் இருக்கும். இலங்கையைப் பொறுத்தவரையில், எளிதான உண்மையை நீங்கள் எப்பொழுதுமே மறுத்து விடுகின்றீர்கள். இலங்கையில் இன்றுள்ள பிரதான பிரச்சினை எது என்ற கேள்விக்கு மழுப்பலுடனும் திமிருடனும்தான் நீங்கள் பதிலளிக்கின்றீர்கள்.

பேரினவாத இரத்தச் சேற்றில் இந்த நாடு புரண்டு கொண்டிருக்கின்றது. ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் தனக்கு இயல்பாகவேயுள்ள சம உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றதென்ற யதார்த்தம் உங்களுக்குப் பீதியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

மற்றவர்களைப்பேபால நாமும் மனிதர்கள்தாம் எனத் தமிழ் மக்கள் நினைப்பது தவறா? அவர்கள் அவ்வாறு வாழ்வதற்கான முயற்சியை அடக்குவதற்கான உங்களுடைய முயற்சி, மனித இயக்கத்திற்கெதிரான செயற்பாடாகும். இதில் நிச்சயம் உங்களுக்குத் தோல்விதான் கிட்டும்....

இந்த ஈவிரக்கமற்ற யுத்தமானது கடந்த 10 வருடங்களுக்கு மேலாக ஆயிரக்கணக்கான மக்களைக் காவு கொண்டுவிட்டது. மறுபுறம் மீளமுடியாத பொருளாதாரச் சுமை என்ற சகதியில் மக்களைத் தள்ளியுள்ளது. அந்த வகையில் நீங்கள் தொடுத்துள்ள யுத்தம் இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும் எதிரானதே....

இந்த நாட்டில் அமைதி திரும்ப வேண்டும். இந்த நாடு சுபிட்சப்பாதையில் நடைபோட வேண்டும் என்று நீங்கள் கூறுவதெல்லாம் வெற்று வார்த்தை ஜாலங்கள்தான் என ஐயுற வேண்டியுள்ளது.

உலகின் பிரபல தத்துவ மேதையொருவர், "கொன்று பலியாக்கப்பட்ட மனிதனின் மண்டையோட்டில் இருந்தன்றி வேறு எதிலிருந்தும் அமுத பானம் பருக விரும்பாத கோர தெய்வம்" பற்றிக் குறிப்பிட்டார். அவரின் இந்தக் கூற்று யாருக்குப் பொருந்துகின்றதோ இல்லையோ, அவர் கூறிய கோர தெய்வம் இங்குதான் குடியிருக்கின்றது போலல்லவா நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

மொத்தமாக வடக்குக் கிழக்கிலுள்ள சனத்தொகையில் மிகப் பெரும் பகுதி உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் அகதிகளாக இருக்கும்போது உங்கள் மேல்பூச்சு மருந்துகள் எதுவும் அவர்களுக்கு நிவாரணம் ஆகாது. உங்கள் புனர்வாழ்வுத் திட்டங்கள் யாவும் அகதி முகாம்களில் பாத்திரங்களுடன் வாழும் நிலையையே பராமரிக்கின்றன. நிரந்தரத் தீர்வுத் திட்டம் உங்களிடத்தில் இல்லை அப்படியானால் தமிழ்த் தேசிய இனத்தின் தனித்துவத்தை அழிக்கும் திட்டம்தான் உங்களிடம் இருப்பதாக நான் கருதுகிறேன்.

இந்த இடத்தில் நான் இன்னுமொரு விடயத்தைக் கூற விரும்புகிறேன். இந்த நாட்டின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கென இந்திய-இலங்கை ஒப்பந்தம் ஒன்று 1987 ஜூலையில் ஏற்படுத்தப்பட்டது. அதன் பலாலன்களை மக்களுக்குக் கிட்டாமல் செய்வதற்கு உங்கள் அரசாங்கம் எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. அன்று புலிகளுடன் இணைந்து மாகாண அரசைச் சிதைத்தீர்கள். ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உறுப்பினர்களையும், இந்திய அமைதிப் படையினரையும் கொன்றொழிக்கவெனப் புலிகளுக்கு பெருந்தொகையான ஆயுதங்ளைக் கொடுத்துதவினீர்கள்.

இந்திய அமைதி காப்புப் படையை வெளியேற்றுவதில் பிரேமதாசா தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசும் புலிகளும் கரம்கோர்த்து செயற்பட்டதன் பூதாகாரமான விளைவையே இன்று அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள். வடக்குக் கிழக்கு மாகாண சபையின் செயற்பாட்டிற்கு நீங்கள் இடையூறு விளைவிக்காமல் இருந்திருந்தால் இன்று இத்தகைய நிலை ஏற்பட்டிருக்காது. பயங்கரவாதச் செயல்களுக்கும் எந்த முகாந்திரமும் இல்லாமல் போயிருக்கும்....

அரசியல் சட்டங்களை மாற்றி தீவிரமான அடிப்படை மாற்றங்களைச் செய்யாதவரை, அதாவது ஒற்றையாட்சி முறையை மாற்றி, இணைப்பாட்சி முறையை ஏற்படுத்தாதவரை, இனப் பிரச்சினை தொடர்பான எந்தத் தீர்வுத் திட்டமும் உருப்படியான பயன் எதையும் தரப் போவதில்லை....

> பேரினவாத இரத்தச் சேற்றில் இந்த நாடு புரண்டு கொண்டிருக்கின்றது. ஒடுக்கப்பட்ட தமிழ்த் தேசிய இனம் தனக்கு இயல்பாகவேயுள்ள சம உரிமைகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றதென்ற யதார்த்தம் உங்களுக்குப் பீதியை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

தமிழ் மக்களின் சார்பாக இவ்வுரையில் இறுதியாக ஒன்று கூற விரும்புகிறேன். தமிழர் பிரச்சினைக்குத் தீர்வாக இப்போது உங்களால் முன்வைக்கப்பட்டுள்ள யுத்தம் நீங்கள் விரும்பாத, ஜீரணிக்க முடியாத விளைவுகளை நோக்கித்தான் நாட்டை இட்டுச் செல்லும்.

இந்தத் தருணத்திலும் தமிழர்களின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்பதை நீங்கள் உணரத் தவறினால் தமிழர்களுக்கு இறுதி வரை எதையும் அங்கீகரிக்கத் தயாராக இருக்காதவர்கள் என்று வரலாற்றில் ஒரு நிரந்தரமான அத்தியாயம் எழுதப்படும். அப்போது உங்களை நியாயப்படுத்துவதற்கு எந்தச் சாட்சியும் இருக்காது.

> நம்முன் நீண்டு படுத்திருக்கிறது நாம் கடக்க வேண்டிய பாதை. வர்க்கங்கள் அற்ற ஒரு சமுதாயத்தை, அனைத்துவித ஏற்றத் தாழ்வுகளும் இல்லாதிருக்கும் ஒரு சமுதாயத்தை, அந்த முழுயான சமுதாயத்தை நாம் அடையும்வரை, நமது போராட்டங்களும் சிரமங்கள் நிறைந்ததாகவே இருக்கும்.
>
> – சேகுவேரா

## ஆச்சிப்பிள்ளை ஆச்சிக்கு எம் அஞ்சலி!

மயிலிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆச்சிப்பிள்ளை அவர்கள் கடந்த 05.11.93 அன்று சென்னையில் நடைபெற்ற ரயில் விபத்தொன்றில் அகால மரணமெய்தினார்.

தனது 3 பிள்ளைகளை, ஈழ விடுதலைப் போராட்டத்திற்கு அர்ப்பணித்த ஆச்சிப்பிள்ளை ஆச்சி, அவர்களில் இருவர் மரணத்தைத் தழுவி விட்டபோதும், அது பற்றிய தளர்ச்சியெதுவுமின்றிச் செயற்பட்டவர்.

கரை வேலைகளில், ஆரம்ப காலத்திலிருந்தே வீரமிக்க பங்களிப்பை நல்கிய ஆச்சி எத்தனையோ இடர்களுக்கு மத்தியிலும், தோழர்கள் அனைவரிடத்திலுமான பாசத்தோடு பணியாற்றியவர். ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, புலிகளால் தடை செய்யப்பட்டிருந்த காலத்தில், அசாதாரண துணிச்சலோடு பல காரியங்களை ஆச்சி நிறைவேற்றினார்.

தோழர்கள் எங்கிருந்தாலும் தன்னந்தனியாக, தனது தள்ளாத முதுமையிலும் தேடிச் சென்று பேசுவார். உற்சாகமூட்டுவார். தமிழ் நாட்டிலுள்ள பல அகதி முகாம்களில் அவரைத் தெரியாதவர் இல்லை என்றே கூறலாம்.

ஆண் ஆதிக்க சமுதாயத்தில் தன்னந்தனியாக இந்த மூதாட்டி பல சவால்களுக்கு முகம் கொடுத்தார். வேலூர் சிறையிலிருக்கும் தனது மகனுடைய விடுதலை தொடர்பாகப் பேசுவதற்கு கோட்டைக்குச் சென்று கொண்டிருந்தபோதே விபத்தில் அவர் மரணமடைந்தார்.

எமது சமூகம் அனுபவிக்கும் அவலமான வாழ்க்கைக்கு ஆச்சிப்பிள்ளை ஆச்சி ஒரு எடுத்துக்காட்டு. வாழ்க்கையில் பெரும் புயல்கள், சவால்களைக் கண்டு அந்த மூதாட்டி மருண்டு விடவில்லை தனது மரணத் தறுவாயிலும்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி EPRLF

படிப்பகம்

இப்பத்திரிகை, 32, மார்கஸ் பெர்னாண்டோ மாவத்த, கொழும்பு 7 ...